# அச்சாரம்
ACCHARAM
பல்சுவை மாத இதழ்
Tamil Monthly

| | | | |
|---|---|---|---|
| மலர் - 8 | இதழ் -10 | மே 2024 | விலை ரூ.15/- |
| Volume - 8 | Issue -10 | May 2024 | Price Rs.15/- |






ஓம் சக்தி ஸ்டுடியோஸ்
துரை ரெங்கநாயகி
வழங்கும்
விரைவில்
சோழவம்சம்
என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
திரைக்கதை & தயாரிப்பு
C.துரைராஜ்
கதை வசனம் இயக்கம்
ரிஜய்கார்த்திக்
வெண்ணிலா சரவணன் அபு V.M.உதயசங்கர் D.F.T., இளம்செழியன் B.F.A., F.B.F.A., R.B.F.F.A இளையருகன் வெங்கட் சசி&சசி

# ஆசிரியர் பக்கம்

# அச்சாரம்

மலர் & ௦௮ இதழ் & 1௦ **மே 2024**

வெளியீட்டாளர் & ஆசிரியர்

**M.C.சேகர் B.E.,**

**நிர்வாக ஆசிரியர் V.செந்தில்குமார்**

இணை ஆசிரியர்கள்

P.ரஞ்சித்குமார், பாலகுமார்சோமு,

R.அபிரூ ம.சி.,

R.சிவா M.Tech., சே.உமா,

தமிழ் ஆப்தன் (தினேஷ்)

துணை ஆசிரியர்கள்

ஜி.மதுராஜ், A. NANDAN

R.சரண்குமார் B.E., A.E.SELVAM

A.K.MUTHU, SP.SELVAKUMAR

கௌரவ ஆசிரியர்

N.வெங்கடேசன் PSK Travels

M.SIVAKUMAR

பொறுப்பாசிரியர்

M.திரவியப்பாண்டியன் M.A., L.L.B.,

சிறப்பாசிரியர்

K.அன்பழகன்,

முதன்மை நிருபர் & ஆலோசகர்

பாப்பனப்பட்டு வ.முருகன்

நிருபர்கள்

A.சரவணன்

B.P.முன்னா

புகைப்படக் கலைஞர்

K.சுரேஷ் B.Tech.,

சட்ட ஆலோசகர்கள்

K.செந்தூரபாண்டி B.Sc.,B.L.,

C.காசிவிஸ்வநாதன் B.Sc., B.L.,

P.பாலசுப்பிரமணியம் B.A., B.L.,

வடிவமைப்பு:

adham's digital @9025483320



SF1, 2nd Floor, 5/10, Anna Colony,

Virugambakkam, Chennai - 600 092.

**Cell: 9444153340**

E-mail: accharam2016@gmail.com




அனைத்து வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரம் கொடுத்து உதவிக்கொண்டு வருபவர்களுக்கும் முதல் வணக்கம். மே 1ல் வெளிவரும் அச்சாரம் ௮ஆம் ஆண்டின் 1௦ஆம் இதழை உங்கள் ஆதரவோடு தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க வாசகர்கள் சந்தாவை செக்காக அனுப்பியது மட்டுமில்லாமல் சந்தா தொகையினை வங்கியிலும் கட்டி ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து உங்கள் ஆதரவை நல்கும்...


**M.C.சேகர் B.E., ஆசிரியர்**

செல்: 9444153340

# இராசுக்குட்டி பதில்கள்

**தோல்வியும் வெற்றியாகுமா?**

—ஆர்.இளங்கோவன், செங்கல்பட்டு

ஆகும். அடுத்து வரும் கதையைப் படியுங்கள், உங்களுக்கே நன்கு புரியும்.

ஒரு கிராமத்தில், ஓர் அறிஞர் இருந்தார். அவர் ஒரு பொருளாதார மேதை. பல மன்னர்கள், தங்கள் நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்படுத்த, அவர் ஆலோசனையை நாடுவர்..

ஒருநாள் அந்தக் கிராமத் தலைவர் அவர் முன் வந்து, அவரைப் பார்த்து, ‘ஐயா, அறிஞரே... நீங்கள் பெரிய அறிஞர் என்று உலகமே பாராட்டுகிறது... ஆனால், உங்கள் பையன் ஓர் அடி முட்டாளாக இருக்கிறானே... தங்கம், வெள்ளி, இவற்றுள் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது என்று அவனைக் கேட்டால், அவன் வெள்ளி என்று சொல்கிறான்... வெட்கக்கேடு!‘ என்று, கிண்டலாகச் சொன்னார்.

அறிஞர், மிக வருத்தமடைந்தார். கிராமத் தலைவர் சென்றபின் பையனை அழைத்து, ‘தங்கம், வெள்ளி, இவை இரண்டில் அதிக மதிப்பு வாய்ந்தது எது?‘ என்று கேட்டார்.

பையன் சொன்னான், ‘தங்கம்!‘ என்று.

உடனே அறிஞர், ‘பின் ஏன், கிராமத் தலைவர் கேட்கும்போது, வெள்ளி என்று சொன்னாய்?‘ என்று, அவனிடம் வினவினார்.

‘தினமும் நான் பள்ளி செல்லும்போது, அவருடைய ஒரு கையில் தங்க நாணயத்தையும், மறு கையில் வெள்ளி நாணயத்தையும் வைத்துக் கொண்டு, ‘அறிஞரின் மகனே...‘ என, என்னை அழைத்து, ‘இவ்விரண்டில் மதிப்பு வாய்ந்ததை, நீ எடுத்துக் கொள்...‘ என்று சொதாங்களை. நான் உடனே, வெள்ளி தான் மதிப்பு வாய்ந்ததென்று சொல்லி, அதை எடுத்துக் கொள்வேன். உடனே அவரும், சுற்றி இருப்பவர்களும் சிரித்துக் கிண்டல் செய்வார்கள். நான் அந்த வெள்ளி



நாணயத்துடன் போய் விடுவேன். இது ஓராண்டாக நடக்கிறது. தினம் எனக்கு ஒரு வெள்ளி நாணயம் கிடைக்கிறது. நான் தங்கம் என்று சொல்லி எடுத்துக் கொண்டிருந்தால், அன்றோடு இந்த விளையாட்டு நின்றிருக்கும். எனக்கு நாணயம் கிடைப்பதும் தடைபட்டிருக்கும்...‘ என்றான்.

உடனே அறிஞர், திகைப்பும் வியப்பும் அடைந்தார்.

இப்படித்தான் பலர், வாழ்க்கையில் பல நேரங்களில் முட்டாள்களாக வேடம் அணிகிறார்கள், மற்றவர்கள் அதைப் பார்த்து மகிழ்வதற்காக. ஆனால், அவர்கள் தோற்பதில்லை. அவர்களின் தோல்வியும் வெற்றிதான்... எதிராளிகள் வெல்வதாகவே எண்ணிக் கொண்டிருப்பார்கள். ஆனால், வேறு கோணத்தில் பார்க்கும்போது, அவர்கள் தோற்றதே தெரியாமல் தோற்றிருப்பார்கள்.

**நட்பு என்பது, எப்படி இருக்க வேண்டும்?**

—கு.போதனா, திருநெல்வேலி

நட்பிற்குரிய இலக்கணங்களில் ஏதேனும் ஒன்றாவது இருக்கும்படி பார்த்துக் கொள்ளும் நட்புதான், பிரியாமல் நீடிக்கும்.

கலைவாணருக்கும் அண்ணாவுக்குமான நட்பு, ஆச்சரியமானது.

கலைவாணருக்காக அண்ணா எழுதிய கதை, ‘நல்லதம்பி‘.

கதைப்படி, படத்தில் கலைவாணருக்கு ஒரே

ஒரு கதாநாயகி தான். அது, 'பானுமதி'. அந்தப் படம் தயாரிப்பிலிருந்த போது, அண்ணா ஒருமுறை, கலைவாணர் இல்லத்துக்குச் சென்றார். அப்போது, தன் கணவருடன் தான் நடிக்க முடியவில்லையே என, கலைவாணரின் மனைவி, 'மதுரம்' கவலைப்பட்டதை, அவரின் செயல்மூலம் தெரிந்து கொண்டார், அண்ணா.

அன்றிரவே, 'நல்லதம்பி' படத்தின் கதையில், மதுரத்துக்கென ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி, கலைவாணருக்கு ஜோடி ஆக்கினார், அண்ணா.

தனக்குப் புகழ் கொடுத்த அந்தப் படத்துக்கு சன்மானமாக, அண்ணாவுக்கு ஒரு காரைப் பரிசளித்தார், கலைவாணர்.

காஞ்சிக்கு நேரில் வந்து அதைத் தந்ததோடு, பெட்ரோல் தட்டுப்பாடு நிலவிய காலம் அது என்பதால், குறிப்பிட்ட காலம் வரை, அந்தக் காருக்குத் தேவையான பெட்ரோல் டோக்கன்களையும் கொடுத்தார், கலைவாணர்.

**சிந்தனையைத் தூண்டும்படியான, ஒரு கதை சொல்ல முடியுமா?**

—தி.மாரிமுத்து, சிதம்பரம்

ஓர் ஊரில், புரளி பேசி திரியும் ஒருவன் இருந்தான். அவன் ஒரு முறை, அவ்வூர்க்காரர் ஒருவர் மீது வீண் பழி சுமத்தி, பஞ்சாயத்தைக் கூட்டினான். பஞ்சாயத்திலும் ஊர்க்காரருக்குத் தண்டனை கிடைத்தது.

பின், வீட்டிற்கு வந்த புரளி ஆசாமியின் மனசாட்சி உறுத்தியது. ஊர்க்காரர் மீது பொய்யான பழி சொன்னதை எண்ணி வருந்தினான். எனவே, தன் பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்ய எண்ணினான்.

என்ன பிராயச்சித்தம் செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. எனவே, அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென்றான்.

'துறவியாரே... நான் இந்தக் கிராமத்தில் வசிக்கும் ஒருவர் மீது வீண் பழி சொல்லிவிட்டேன். அது என் மனதை உறுத்துகிறது. அந்தப் பாவத்தில் இருந்து தப்பிக்க, எனக்கு வழி கூறுங்கள்...' என்று கேட்டான்.

துறவி சிறிது யோசித்துவிட்டு, 'இன்று இரவு, ஐந்து கிலோ இலவம்பஞ்சை எடுத்துப் போய், உன்னால் பாதிக்கப்பட்டவரின் வீட்டு முன்பு பரப்பிப் போட்டுவிட்டு வந்து விடு... மீண்டும் நாளை வந்து என்னைப் பார்...' என்று கூறினார்.

அவனும், பஞ்சைக் கொண்டு சென்று, பாதிக்கப்பட்டவரின் வீட்டு முன்பு பரப்பி விட்டான். மறுநாள் சென்று துறவியைப் பார்த்தான்.

'துறவியாரே... நீங்கள் சொன்னது போலவே செய்துவிட்டேன்... இந்நேரம் என் பாவம் போய் இருக்குமா?' என்று கேட்டான்.

உடனே துறவி, 'நீ இப்போது, அதே வீட்டிற்குச் செல்... அங்கே நீ, நேற்றிரவு பரப்பி வைத்த பஞ்சை, மீண்டும் சேகரித்துக் கொண்டு வா...' என்று கூறினார்.

அவன் மிகுந்த ஆவலுடன் ஓடினான். ஆனால், ஒரு கை அளவு பஞ்சு கூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்துபோய் விட்டிருந்தது. அதனைக் கண்டவன் திடுக்கிட்டான். மீண்டும் துறயிடம் ஓடி வந்தான்.

'துறவியாரே... நேற்றிரவு நான், வீட்டின் முன்னால் போட்டுவிட்டு வந்த பஞ்சில் சிறிது கூட, இப்போது அங்கு இல்லை... என்ன செய்வது?' என்று கேட்டான்.

துறவி சிரித்துவிட்டு, 'நீ போட்டுவிட்டு வந்த பஞ்சை, இப்போது மீண்டும் எப்படி அள்ள முடியாதோ, அதேபோல, நீ ஒருவர் மீது கூறிய பழியையும், அதனால் உனக்கு ஏற்பட்ட பாவத்தையும் மாற்றவே முடியாது... திருப்பி சேகரிக்க முடியாத பஞ்சைப் போன்றது தான், உன் பழிச் சொற்களும்... அவற்றையும் இனித் திருப்பி வார முடியாது... உன் மன ஆறுதலுக்காக வேண்டுமானால், இறைவனிடம் உன் தவறுக்காக மன்னிப்பு கேள்... இன்றிலிருந்தாவது, பிறர்குறித்து புரளி பேசுதலையும், அடுத்தவர் மீது வீண்பழி சுமத்துவதையும் விட்டுவிடு...' என்றார்.

**‘கிங் மேக்கர்‘ காமராஜர் புகழ் நிலைத்திருக்க, காரணமென்ன?**

—பா.பொன்னன், மதுரை

அவருடைய நல்ல குணங்களும், நல்லாட்சியும், மாண்பான செயல்களும் தான், அவர் புகழ் நிலைக்கக் காரணமானவை.

தமிழக முதல்வராக, காமராஜர் ஆட்சி செய்த காலம் அது.

இரண்டு பஸ் கம்பெனி முதலாளிகள், தங்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி, காமராஜரைப் பார்க்க வந்திருந்தனர்.

‘ஐயா! தமிழகத்தில் பஸ் கட்டணங்கள் மிகவும் குறைந்த அளவில் உள்ளன… கம்பெனியை நடத்துவதில், லாபமும் அதிகம் இல்லை. எனவே, பஸ் கட்டணத்தை உயர்த்துங்கள்…‘ என்றனர்.

‘சரி… உங்க கம்பெனியோட பேர் என்ன?‘ என்று கேட்டார், காமராஜர்.

உடனே ஒருவர், ‘--- டிரான்ஸ்போர்ட் சர்வீஸஸ்‘ என்றார்; மற்றொருவர், ‘--- பஸ் சர்வீஸஸ்‘ என்றார்.

இதைக் கேட்டதும், ‘சர்வீஸ்னு பேரு வைச்சுருக்கீங்களே… இதுக்கு என்ன அர்த்தம்? தமிழ்ல, ‘சேவை‘ன்னு சொல்லுவோம்; சேவைன்னா, எந்த லாப நோக்கமும் இல்லாம, மத்தவங்களுக்கு உதவறதுதானே? உங்ககிட்ட பஸ் தயாரிக்க வசதி இருக்கு… அந்த வசதிய, பொதுமக்களோட வசதிக்கு பயன்படுத்துங்க… அதுதான் உண்மையான சேவை… அதைவிட்டுட்டு, லாபம் குறையுதேன்னு புலம்பாதீங்க…‘ என்று, அவர்களை வழியனுப்பி வைத்தாராம், காமராஜர்.

**ஒருவரின் உயர்வுக்கும், வளர்ச்சிக்கும், அவரின் ஆர்வம் முக்கியமா, திறமை முக்கியமா?**

—கே.மைக்கேல், விழுப்புரம்

தனக்கான துறையைத் தேர்ந்தெடுப்பதில், ஒருவரின் ஆர்வம் தான் அடிப்படை. ஆனால், ஆர்வம் இருக்கிறது என்பதாலேயே, திறமை வந்து விடாது. எனவே, திறமையில் சறுக்கல்கள் வரும்போது, ஆர்வத்துக்குச் சற்றே அணை போட்டு விட வேண்டும்.

திறமை எதில் இருக்கிறதோ, அதில் ஏற்கெனவே இருக்கக் கூடிய சிறிதளவு ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு, அதைப் முதன்மைத் துறையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆர்வம் அதிகமாக உள்ளதை இழந்து விடாமல், பொழுது போக்காகவோ, இரண்டாவது துறையாகவோ வைத்துக் கொள்ளலாம்.

ஆர்வம் மாறிக் கொண்டே இருக்கும். ஆனால், திறமை அப்படி அல்ல. தவிர, திறமையைத் தொடர்ந்து பட்டை தீட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு அதிக முயற்சி தேவைப்படும். எனவே, தங்களது திறமையைக் கண்டு கொண்டு, அதில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு சிறப்பாக வருவதே சிறந்த வழியாக இருக்க முடியும்.

சிங்கம் ஒன்று, ஒரு காட்டை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அது, தன் காட்டில் வாழ்கின்ற மிருகங்களில், எதற்கு அதிக திறமை இருக்கிறது என்று சோதிக்கப் பார்க்க விரும்பியது. அன்று மாலை, காட்டில் உள்ள எல்லா மிருகங்களையும் அழைத்து, தான் நடத்தப் போகும் சோதனையை விளக்கி, நாளை காலையில் எல்லா மிருகங்களும் என் குகைக்கு வர வேண்டும் என்று சொல்லியது.

அன்றிரவு மிருகங்கள், யார் அந்த திறமைசாலி என்று குழம்பிக் கொண்டே உறங்க சென்றன.

காலையில், சிங்கம் நம் திறமையை எப்படி சோதனை செய்யப் போகிறதோ என்ற கவலையில், எல்லா மிருகங்களும் சிங்கத்தின் இருப்பிடத்துக்கு வந்தன.

குகையிலிருந்து வெளியே வந்த சிங்கம், அங்கு கூடி இருந்த மிருகங்களைப் பார்த்து, ‘அதோ தொலைவில் தெரிகிறதே, அந்த பனை மரத்தின் உச்சிக்கு யார் முதலில் சென்று வருகிறீர்களோ, அவரே சிறந்த திறமைசாலி…‘ என்றது.

திகைத்துப் போன மிருகங்கள், மரத்தை நோக்கி ஓடின. அதில் ஏறத் தொடங்கின.

முதலில் மரத்தின் உச்சியை, அணில் தொட்டது. மற்ற எவற்றாலும், பாதி உயரம் கூட ஏற முடியவில்லை.

வெற்றி பெற்ற அணிலோடு, காட்டின் தலைவனான தான் போட்டியிடப் போவதாக அறிவித்தது, சிங்கம். ஆனால், அந்த சிங்கத்தால் மரத்தில் ஏற முடியாமல் தோல்வியைத் தழுவியது.

குழம்பிப்போன சிங்கம், ஒவ்வொரு மிருகத்திடமும் அதனதன் திறமையை கேட்டு அறிந்தது. சிறுத்தை, நன்றாக ஓடுவேன் என்றது. குரங்கு, மரம் விட்டு மரம் தாவுவேன் என்றது. யானை, நான் அதிக எடையை சுமப்பேன் என்றது.

இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு திறமை உண்டு என்பதை அறிந்து கொண்டது சிங்கம்.

திறமையை சோதிக்க, அனைவருக்கும் ஒரே மாதிரி போட்டி வைத்த தனது மடமையை எண்ணி வருந்திய அது, பின்னர் தெளிவு அடைந்தது.

ஆர்வத்துக்கு முதலிடம் தர வேண்டும் என்று தான், தொழில் ஆலோசகர்கள் சொல்கிறார்கள். எதில் ஆர்வம் இருக்கிறதோ, அதில் திறமையை வளர்த்துக் கொள்வது தான் சிறந்தது.

ஆர்வம் ஆழமாக இருந்தால், திறமையை வளர்த்துக் கொள்வதற்கான ஊக்கத்தையும், அந்த ஆர்வமே தந்து விடும்.

**அஜித்தை 'தல' என அழைக்கவைத்த தீனா திரைப்படம் ரீ– ரிலீஸ் செய்கிறது லாவண்யா பிலிம்ஸ்**

நடிகர் அஜித் நடித்த திரைப்படமான தீனா 23 ஆண்டுகளுக்குப் பின் ரீ-ரிலீஸ் ஆகிறது.

புதிய திரைப்படங்களுக்கே டஃப் கொடுக்கும் விஜய் நடித்த கில்லி ஒரே வார ரிலீஸில் கோடிகளை அள்ளி மிகப்பெரிய சாதனை படைத்துள்ளது.

நடிகர் அஜித் குமார் நடித்து, **தீனா** திரைப்படம்




வெளியாகி 23ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இந்நிலையில் அதை டிவிட்டரில் அஜித் ரசிகர்கள் நினைவுகூர்ந்து கொண்டாடி வருகின்றனர்.

இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸின் முதல் படமாக ஜனவரி 14ஆம் தேதி பொங்கலை ஒட்டி, 2001ஆம் ஆண்டு இப்படம் வெளியானது. இப்படத்தில் அஜித் குமார், மலையாள நடிகர் சுரேஷ் கோபி, லைலா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து இருந்தனர். இப்படத்துக்கு பாடல்கள் மற்றும் பின்னணி இசையை யுவன் சங்கர் ராஜா செய்திருந்தார். பாடல்களும் செம ஹிட்டானது.

இப்படத்துக்குண்டான ஆக்‌ஷன்மோட் ஒளிப்பதிவினை அரவிந்த் கமலநாதன் மேற்கொண்டிருந்தார். இப்படத்தில் தான் முதன் முதலாக, தல இருக்கும் போது வால் ஆடக்கூடாது என்னும் வசனத்தை ஸ்டண்ட் மேன் மகாநதி ஷங்கர் பேசியிருப்பார். அன்று முதல் பல ஆண்டுகளாக, தல என ரசிகர்களால் செல்லப்பெயருடன் அழைக்கப்பட்டார் அஜித்.

இந்நிலையில் சமீபத்தில் தீனா படம் குறித்து நிறையப் பேர் பேசி வரும் நிலையில் இப்படத்தை டிஜிட்டல் மெருகேற்றல் செய்து, மே மாதம் 1 ரீ- ரிலீஸ் செய்வதாக தயாரிப்பு நிறுவனமான விஜயம் சினி கம்பைன்ஸ் நிறுவனம் தெரிவித்தது.

இப்படத்துக்குண்டான திரையரங்க ரிலீஸை, பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஸ்ரீ லாவண்யா ஃபிலிம்ஸ் செய்கிறது.




'அய்யாவுக்கு காடுகறையலெ சுத்தி காட்டணும்னு நாந்தேன்ங்கையா கூட்டியாந்தேன்'.

முனியன் முந்தி கொண்டான். விட்டால் போதும் என்பது போல, விடை பெற்று புறப்பட்டு போனா, சங்கரநாதன் உருவம் புள்ளியாய் தேய்ந்து மறைந்தது.

சங்கர நாதனின் பழைய வரலாறுகளை சொன்ன முனியன். தாமரை சங்கரநாதனுக்கும் உள்ள உறவை மறைத்தான். வயல் காடுகளை சுற்றி காண்பித்தான். அதில் மனம் ஒட்டாத பாலகிருஷ்ணன் . சங்கர நாதனை பற்றி புகழ்ந்து பேசுவதில் கவனம் செலுத்தினான்.

முனியனுக்கு அது எரிச்சலை உண்டு பண்ணியது. அதே நேரம் தன்னை ஒரு கீழ்சாதி வேலைக்காரன் என்று எண்ணாமல். பாலகிருஷ்ணன் தோளில் கை போட்டு பேசியது, முனியனை சந்தோஷத்தின் எல்லைக்கே கொண்டு சென்றது.

'என்ன உயர்வான மனுஷன்'. எண்ணிஎண்ணி முனியன் வியக்கும் வேலையில். இப்படிப்பட்ட நல்ல மனுஷனுக்கு இந்த தரங்கெட்ட பொம்பளை தரமாகிப் போச்சே!' உள்ளுக்குள் வேதனைப் பட்டாலும் வெளியில் சொல்ல தைரியம் வரவில்லை. பனங்காடு சென்று இருவரும் கள்ளு குடித்தனர் . 'ஏய் முனியா! உஞ்சின்னாத்தாகிட்ட சொல்லிப்புறாதேப்பா, கலியாணம் ஆன புதுசுலெ தப்பா போகும்'.

'கள்ளு குடிக்கிறதயே நீங்க தப்புன்னு நெனக்கிறயெ, அங்கே, கற்ப்பே சோரம் போயிகிட்டு இருக்கு'. என்று மனதினுள் சப்தம் போட்டு கோபமாக கூறிய முனியனின் வார்த்தைகள், பாலகிருஷ்ணனுக்கு கேட்க நியாயமில்லை.

'என்ன முனியா! பேசாம அப்படி பாக்குறே?'

'ஒன்னுமில்லெங்கையா, நான் என்னத்தெ

சொல்லப்போறேன். அதலாம் சொல்ல மாட்டேன்'.

இருவரும் புறப்பட்டு தோப்புக்கு வந்தனர். வாய்காலை சரி செய்ய மண்வெட்டியை எடுத்தான் முனியன். தடுத்து தான் வாங்கிய பாலகிருஷ்ணன் கொஞ்ச நேரத்தில் வாய்கலை சீர் செய்தான் புது மாப்பிள்ளையின் புது வேட்டி சேர் தெரித்து கருப்பு வெள்ளையாய் மாறியது கண்டு வருத்தப்பட்ட முனியன். 'அய்யாவுக்கு காடுகறையலெ சுத்தி காட்டணும்னு நாந்தேன்ங்கையா கூட்டியாந்தேன்'.

முனியன் முந்தி கொண்டான். விட்டால் போதும் என்பது போல, விடை பெற்று புறப்பட்டு போனா, சங்கரநாதன் உருவம் புள்ளியாய் தேய்ந்து மறைந்தது.

சங்கர நாதனின் பழைய வரலாறுகளை சொன்ன முனியன். தாமரை சங்கரநாதனுக்கும் உள்ள உறவை மறைத்தான். வயல் காடுகளை சுற்றி காண்பித்தான். அதில் மனம் ஒட்டாத பாலகிருஷ்ணன் . சங்கர நாதனை பற்றி புகழ்ந்து பேசுவதில் கவனம் செலுத்தினான்.

முனியனுக்கு அது எரிச்சலை உண்டு பண்ணியது. அதே நேரம் தன்னை ஒரு கீழ்சாதி வேலைக்காரன் என்று எண்ணாமல். பாலகிருஷ்ணன் தோளில் கை போட்டு பேசியது, முனியனை சந்தோஷத்தின் எல்லைக்கே கொண்டு சென்றது.

'என்ன உயர்வான மனுஷன்'. எண்ணிஎண்ணி முனியன் வியக்கும் வேலையில். இப்படிப்பட்ட நல்ல மனுஷனுக்கு இந்த தரங்கெட்ட பொம்பளை தரமாகிப் போச்சே!' உள்ளுக்குள் வேதனைப் பட்டாலும் வெளியில் சொல்ல தைரியம் வரவில்லை. பனங்காடு சென்று இருவரும் கள்ளு குடித்தனர் . 'ஏய் முனியா! உஞ்சின்னாத்தாகிட்ட சொல்லிப்புறாதேப்பா, கலியாணம் ஆன புதுசுலெ தப்பா போகும்'.

'கள்ளு குடிக்கிறதயே நீங்க தப்புன்னு நெனக்கிறயெ, அங்கே, கற்ப்பே சோரம் போயிகிட்டு இருக்கு'. என்று மனதினுள் சப்தம் போட்டு கோபமாக கூறிய முனியனின் வார்த்தைகள், பாலகிருஷ்ணனுக்கு கேட்க நியாயமில்லை.

'என்ன முனியா! பேசாம அப்படி பாக்குறே?'

'ஒன்னுமில்லெங்கையா, நான் என்னத்தெ சொல்லப்போறேன். அதலாம் சொல்ல மாட்டேன்'.

இருவரும் புறப்பட்டு தோப்புக்கு வந்தனர். வாய்காலை சரி செய்ய மண்வெட்டியை எடுத்தான் முனியன். தடுத்து தான் வாங்கிய பாலகிருஷ்ணன் கொஞ்ச நேரத்தில் வாய்கலை சீர் செய்தான் புது மாப்பிள்ளையின் புது வேட்டி சேர் தெரித்து கருப்பு வெள்ளையாய் மாறியது கண்டு வருத்தப்பட்ட முனியன்.

'என்னைய்யா இப்படி பன்னிபுட்டியே, வேட்டியெல்லாம் சகதியா போச்சு, இப்படியே எப்படி ஊருக்குள்ளே போவிய? இதுக்குத்தான் நான் வெட்றேன்னு சொன்னேன்!'

'நான்தான் வாக்கால் வெட்டுவேன்னு தெரிஞ்சா உஞ் சின்னதா உன்னை திட்டும். அப்படின்னு தானே பயப்படுற. பயப்புடாதே நாஞ் சொல்லிக்கிறேன்.' என்றான் பாலகிருஷ்ணன். எரிச்சல் பொத்திக்கொண்டு வந்தது முனியனுக்கு. அடக்கி கொண்டான். பாலகிருஷ்ணனும் முனியனும் வீடுவந்து சேர்ந்த நேரம் சிவனாண்டியும் முருகையா பிள்ளையும் பயணம் புறப்பட்டு கொண்டிருந்தனர்

'வாங்க மாப்ள, உங்களுக்காகத்தேன் சொல்லிட்டு போகணும்னு காத்துகிட்டு இருக்கோம்'.

'என்ன மாமா?'

' தாமரையோட கலியாணம் முடிஞ்ச உடனே திருப்பதி போகனும்னு வேண்டுதல். அதான் புறப்பட்டேன். தொனைக்கி மாமாவையும் அழைச்சிட்டு போறேன். நீங்கதேன் இன்னமே காடு கறைய பொறுப்பா பார்த்துக்குறனும்'. என்று சிவனாண்டி சொன்னதும்.

’அய்யா, அந்த கவலை உங்களுக்கு வேணாம். போற போக்க பாத்தா என் வேலை காலியாகிரும் போலிருக்கு.

சின்னைய்யா வெஷயத்துல ரொம்ப கெட்டிக்காறரு’.

முனியன் சர்டிபிகேட் கொடுத்தான். பாலகிருஷ்ணன் பவ்யமாக நின்றன். ’அதெல்லாம் எனக்கு ஏக்கனமே தெரியும்டா.’ என்ற கோனார். பாலகிருஷ்ணனை பெருமையாக பேசினார். தாமரை அருகே இருந்தாலும் அவள் கவனம் அப்பாவுக்கு பயணம் அனுப்ப பேக் (ரெடி) பண்ணுவதிலும் மறந்ததை ஞாபகப்படுத்தி எடுத்து வைப்பதிலும் குறியாக இருந்தாள். கோனார் தன்னை புகழ்ந்து பேசுவதை, தாமரை கேட்க வேண்டும் , என ஆவல் கொண்டவனாக, அவள் முகத்தை தான் சிரித்தபடியும், சிரிப்பை மறைத்தபடியும் பார்த்து ஏமாறும் பாலகிருஷ்ணனை பரிதாபமாக பார்த்தான் முனியன் தாமரை மேல் முனியனக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

கோயிலுக்கு புறப்பட்டார் கோனாரும், முருகையாபிள்ளையும். அன்று மதியம் தன் மனைவியுடன் தனது ஊர் சென்று வர நினைத்தான் பாலகிருஷ்ணன்.

குளித்துவிட்டு தலைமுடியை உலர்த்த வேண்டி பால்கனியில் இருந்தால் தாமரை. படியேறி மேலே வந்தான் பாலகிருஷ்ணன். கடைக்கண் பார்வையில் வருவது பாலகிருஷ்ணன் என்பதை அறிந்து கொண்ட தாமரை. தலைமுடியை கரங்களால் தட்டி தட்டி உளர்த்துவதில் கவனமாக இருந்தாள். அருகில் வந்து அமைதியாக நின்றான். மெல்ல சினுங்கியபடி ’தாமரெ! மாமா ஊர்ல இல்ல இப்ப ஊருக்கு போனா, ஒரு வாரம் பத்து நாள் தங்கிட்டு வரலாம். வாயேன் எங்க ஊருக்கு போயிட்டு வருவோம்!

ஊர்ல ஆத்தா எங்க சின்னத்தாய் எங்க அக்கா மாரு, எல்லாரும் உன்ன பாக்க ரொம்ப ஆசையா இருக்காக புள்ளெ! எஞ்சினேகிதன் பெருமா கெடா வெட்டி விருந்து வக்கப் போறானாம் கட்டாயமா கூட்டிட்டு வர சொன்னான். போன வாரம் டவுன்ல கண்டப்போவும். சொல்லிட்டு போனான். நம்ம போனா எல்லாரும் சந்தோஷப் படுவாக!’

அவன் சொல்லுக்கு அவளிடம் மரியாதை இருப்பதாக தெரியவில்லை முடி உளர்த்துவதிலேயே மும்முறமாக இருந்தாள். ’என்ன புள்ளெ! நான் பாட்டுக்கு பேசிகிட்டு இருக்கேன் நீ ஆரோ மாதிரி மசுரு ஒதரிகிட்டு இருக்கே? பாலகிருஷ்ணன் இப்படி கேட்டதும் மடக்கென முகத்தை அவன் பக்கம் திருப்பியவள்.

’ என்னால எங்கேயும் வந்து அலைய முடியாது. ஊருக்கு போகணும்னு ஆசை இருந்தா தாராளமா போகலாம் எவ்ளோ நாள் வேனும்னாலும் இருந்துட்டு வாங்க எனக்கு ஒன்னும் வருத்தமில்லெ!’

’என்ன புள்ளெ ஆத்து விட்டாப்புலெ பேசுற. நீ எங்கேயும் வரலெ! வாக்கப்பட்ட வீட்டுக்குதேன் வரப்போகுறே?’

’வாக்கப்பட்டது நா இல்லே!’ படக்கென சொன்னாள். செருப்பால் அடித்தது போல இருந்தது பாலகிருஷ்ணனுக்கு உபயோகமில்லாத வார்த்தை சொல்லி, ஊரான் கேலி செய்ததை பொறுத்துக் கொள்ளாத அந்த பொன் மனம் பூகம்பத்தில் சிதறுண்ட பூம்பாறையாய் வெடித்தது. இதயத்தில் வேதனையையும் இதழில் புன் சிரிப்பையும் தவழவிட்ட பாலகிருஷ்ணன்

உம்மைதாம் புள்ளெ இருக்க வேண்டிய எடத்துலெ இருந்தா தானே எல்லாருக்கும் மதுப்பு. எமம் மாறி வந்து சேஞ்ந்தது என்னோட தப்பு. தோளு நெறுத்த பாத்தவுடனே மசக்கத்துலெமனசப் பாக்க மறந்துட்டேன். செவத்த தோளா இருக்குன்னு என்னவோ வகமோசமா ஏமாந்துட்டேன். கலக்கமாக பேசினான்.

’என்ன ஏமாந்துட்டீங்க? பொழுது சாஞ்சா வெளக்க அணைக்க மாட்டேங்குறானா? விடிஞ்சா எங்கையால சோறு போட மாட்டேங்குறேனா? அதான் எல்லாமே அகணையா நடக்குதே அப்புறம் என்னவாம்!’ அதே வேகத்தில் பேசினாள்

’இருட்டுலெ சேர்ந்து, வெளிச்சத்துலெ வெலகி

போறது இல்ல புள்ளெ வாழ்க்கை! அதுக்கு புனிதமான தாலி உறவு தேவையில்லை தரங்கெட்ட பொறம்போக்கே போதும்!'

'போக வேண்டியது தானே? யாரும் வேணான்னாங்க?'

'புடிக்கலைன்னா, மூஞ்சிய பார்த்து நேர்ல சொல்லிரு புள்ளெ. அத விட்டுட்டு இப்படி பொசுக்கு பொசுக்குன்னு வார்த்தைகள விடாதே கல்லடியை விட, சொல்லடி பெருசு. உம்மேல நான் எம்புட்டு ஆசை வச்சிருந்தேன் தெரியுமா? அத கொஞ்சம் கூட புரிஞ்சுக்காம பேசுறியே?'

'எனக்கு புரிஞ்சுக்க வேண்டிய அவசியம் இல்லே.'
'சரி இதுக்கு மேல உன்கிட்ட பேசறதுல அர்த்தமில்லை, நான் வாங்கி வந்த வரம் அப்படின்னா யாரெல்லெ மாத்திட முடியும்?' என்று வெளிப்படையாக வேதனைப்பட்டவன்.
'நா ஊருக்கு போயிட்டு வாரம் புள்ளெ!' சொல்லிவிட்டு படியிறங்கியவனை திரும்பிப் பார்த்தாள் தாமரை. தலைவாசல் கடந்து தெருவில் நடந்து போகிறவனை மறையும் மட்டும் பார்த்தாள். அந்தப் பார்வையில் வெறுப்பு மண்டியிருந்தது. கார்காலத்திலும் வானம் மேகமூட்டிய பின் வெறுமையாக காட்சியளித்தது. பாலகிருஷ்ணன் பண்ணடம்பல் வந்து சேர்ந்தபொழுது. மாலை மணி மூன்றாகியிருந்தது. வீட்டில் ஆத்தாவிடம் மனைவிக்கு உடம்பு சரியில்ல என்று சமாளித்துவிட்டு, பெருமாள் வீடு சென்றான் 'தங்கச்சிய கூட்டி வராம உங்களுக்கென்ன இங்கெ சோலி?' என்று உரிமை கொண்டாடினாள் பெருமாள் மனைவி. வயல் காட்டில் பெருமாள் இருப்பது கண்டு தேடி வந்து சேர்ந்தேன் பாலகிருஷ்ணன். புதிதாக வாய்க்கால் தோண்டிக்கொண்டிருந்தான் பெருமாள். வரப்பில் நடந்து வரும் நண்பனைக் கண்டதும் வாயெல்லாம் பல்லாக சிரித்தான். அந்த சிரிப்பில் தான் எத்தனை அன்பு என்ன பாசம்எத்தனை அன்பு? என்ன பாசம். நண்பனிடம் தாயைக் கண்டான் பாலகிருஷ்ணன். உருமாளை கழற்றித் துண்டை உதரி தோளில் போட்டு வரப்பேறியா பெருமாள்.
'இப்ப தானாடா வாறே?'
'உம்'
'ஏன்டா கிட்டுனா சோந்தாப்புலெ இருக்கே? உம் பொஞ்சாதிய கூட்டியாந்திருக்கியா? நல்ல பிருவ குட்டி வாங்கிட்டேன், அந்தாள மேயிது பாரு.' திசையை காட்டினான் சோகத்தோடு பார்த்தான். பாலகிருஷ்ணன். ஆட்டுக்குட்டி ஒன்று செவ்வனே மேய்ந்து கொண்டிருந்தது.

' வெறும் கறிசோறு இல்லடா கிட்டுணா பிரியாணி, வெக்களி எங்கிட்டுணம் பேர சொல்லி திங்கட்டும் எல்லா பயகளும்,ஆமா! என்ன பேச்சவே காணோம்? சந்தோஷமா இருக்கியல்ல?'
'உம்!'
' சும்மா சொல்லக்கூடாது கிட்டுணா உன் பொஞ்சாதிய பாத்து எல்லா பயகளும் மூக்குலெ வெரல வச்சுப்புட்டாங்கெ. என்ன, அந்த காலத்து இளவரசி கணக்கா இருந்தா!?'
பேச்சை மாற்ற நினைத்தான் பாலகிருஷ்ணன்.
'ஆமா! இன்னைக்கெல்லாம் எதுலெ தண்ணி பாச்சப் போறே? வாக்க வெட்டிக் கெடக்கெ ?'

'இல்லையிடா பெருமா! இம்புட்டு வருஷமா அம்ம ரெண்டு பேரும் பெரும் ரெட்டை மாட்டு வண்டி கணக்கா இருந்தோம். நெனைச்ச நேரம் எம்புட்டு வேலையினாலும் நிமுத்தி புறலாம் இப்ப நீ பொஞ்சாதி வீட்டுக்கு மேப்பாக்க போயிட்டெ. நான் ஒண்டிக் கட்டையாகிட்டேன். கோடைகாலத்திலெ தரை காஞ்சு போகும், வாக்கா வெட்ட செரமப்படனுமுன்னு தான் இப்பவே வெட்டிப்போடுறேன். கருசவயில்லெ மொளகா வைக்கலன்னு ஒரு எண்ணம்.'

தொடரும்...

## இங்கு மிருகங்கள் வாழும் இடம் (திரைவிமர்சனம்)




இந்த படத்தை எஸ்.சசிகுமார் இயக்கி இருக்காரு. ஃபைன்ஜான் பிக்சர்ஸ் சார்பில் ஜே.அஜரா பேகம் தயாரிச்சி இருக்காங்க. ஃபைன்ஜான், ஸ்ரீதேவி உன்னி கிருஷ்ணன், சேரன்ராஜ், கோலிசோடா ஐஸ்வர்யா மற்றும் பல நட்சத்திரங்கள் நடிச்சிருக்காங்க. பெண்களுக்கு எதிராக பொள்ளாச்சியில் நடந்த பாலியல் வன்கொடுமைகளை மையமாக வைத்து இப்படம் உருவாகிறது. மனைவியை இழந்த நிலையில் மகளை பாசமாக வளர்க்கும் அப்பாவுக்கு ஒரு நாள் தன் மகள் பேராபத்தில் சிக்கி இறந்து கிடப்பது தெரிய வருகிறது. அதற்குக் காரணமானவர்களை சட்டத்துக்கு முன் நிறுத்தி தண்டனை வாங்கி கொடுக்க நினைக்கிறார். சட்டத்தில் உள்ள ஓட்டையை பயன்படுத்தி அவர்கள் தப்பித்து வெளியே வர, தன் மகளின் இறப்புக்கு காரணமானவர்களை அந்த அப்பா பழி தீர்த்தாரா? இல்லையா? என்பதை இந்த படத்தின் மீதிக்கதை. மகளின் மீது பாசத்தை பொழியும் அப்பாவாக பைன் ஜான். மகளின் நிலைக்கு காரணமானவர்களுக்கு தண்டனை வாங்கி கொடுக்க போராடும் போதும், அது முடியாத போது., பழிவாங்க துடிக்கும் போதும், பலி வாங்கிய பின் அவரின் நிலையும் புதுமுக நடிகர் என்பதை தாண்டி தேர்ந்த நடிகராக வலம் வருகிறார். பாசமான மகளாக ஸ்ரீதேவி உன்னிகிருஷ்ணன் ஹோம்லியான முகம், வெள்ளந்தியான சிரிப்பு, இயல்பான நடிப்பு நம்மை ஈர்க்கிறது. காதலனை நம்பி போய் தனிமையில் மாட்டி பரிதாப முடிவை சம்பாதிப்பதன் மூலம் உணர்ச்சிவசப்பட்டு காதல் வலையில் விழும் பெண்களுக்கும், காதலனின் அத்துமீறலில் சுதாரிக்காத பெண்களுக்கு எச்சரிக்கை மணி அடித்திருக்கிறார். பெண்களை காதலித்து, தங்களின் காம பசிக்கு இறையாக்கி, காதலியை நண்பர்களுக்கு விருந்தாக்குவது என துரோகம், குரூரம், கொடூரம் ஆகியவற்றின் மொத்த உருவமாக வருகின்ற இளைஞர்கள் நான்கு பேரும் பயமுறுத்துகின்றனர். கதாநாயகியின் சிறுவயது தோற்றத்தில் வரும் சிறுமி அழகிலும் நடிப்பிலும் நம்மை கவர்கிறார். சேரன் ராஜ் கம்பீரமான போலீஸ் உயரதிகாரியாக மிரட்டி இருக்கிறார். அமைச்சராக வந்து அதிகார பலத்தை வெளிப்படுத்துபவர். வழக்கறிஞராக வருபவர் என இதில் நடித்திருக்கும் அனைவருமே சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி உள்ளனர். வித்யா ஷரண் இசையில் பாடல்களும் பின்னணி இசையும் ரசிக்க வைக்கிறது. சிவ பாஸ்கரனின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம். இடி மின்னல் இளங்கோவின் சண்டைக் காட்சிகள் அருமை. போதைக்கு அடிமையான அதிகார பலத்திலும், பண பலத்திலும் மிதக்கின்ற மனிதர்களுக்குள் இருக்கின்ற மிருகங்களால் இந்த சமூகம் சந்திக்கும் ஆபத்துகளையும், சீரழிவுகளையும் சமூக அக்கறையோடு சொல்லியிருக்கிறார் இயக்குனர் எஸ்.சசிகுமார்

கிரியே டீவ்
எண்டர்டைனர்ஸ் &
டிஸ்ட்ரி ஃபியூட்டர்ஸ்
மற்றும்
மதுரை அழகர் புரொடக்ஷன் கம்பனி,
மற்றும்
ஒயிட் லாம்ப் பிக்சர்ஸ்
வழங்கும்,
தயாரிப்பாளர்கள்
அழகர் குருசாமி,
K G. ரத்தீஷ்,
தயாரிப்பில்...
தனஞ்செயன் வெளியீட்டில்
இயக்குனர்
ய.மணிவர்மன்
இயக்கத்தில்..
இசையமைப்பாளர்
சஞ்சய் மாணிக்கம்
இசையில்..
ஒளிப்பதிவாளர்
K G ரத்தீஷ்,
ஒளிப்பதிவில்...
தமன் குமார்,
வேலா ராமமூர்த்தி,
M S பாஸ்கர்,
பழ கருப்பையா,
கஜா ராஜ்,
ஶ்ரீ ரஞ்சனி,
தீபா ஷங்கர்,
அருண் கார்த்தி
மற்றும்
பலர் நடித்து ஏப்ரல் 26 ல் வெளியாகியிருக்கும் படம் ஒரு நொடி

**கதை**

படத்து ஓப்பனிங்கில் ஶ்ரீரஞ்சனி தனது கணவர் எம்.எஸ். பாஸ்கரை காணவில்லை என காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறார். என்னவென்றுபோலிஸார் விசாரிக்க தனது கணவன், மகள் கல்யாணத்திற்காக வட்டிக்கு வேலா ராமமூர்த்தி ஆளிடம் கடன் வாங்கினார். கொஞ்ச கடனை வட்டியுடன் கொடுத்துவிட்டோம். மீதி பணத்திற்கு அவகாசம் கேட்டோம். அவகாசம் தராமல் சொத்து பத்திரத்தை கொடுங்கள் அசலும் வட்டியும் கொடுத்துவிட்டு வாங்கி கோள்ளுங்கள் என்று மிரட்டி பத்திரத்தை வாங்கி சென்றார் வேலாமூர்த்தி. எனது கணவர் பணத்தை ஏற்பாடு




செய்து வேலா ராமமூர்த்தியிடம் கொடுத்து சொத்து பத்திரத்தை வாங்க சென்றவர் இதுவரை வீடு வரவில்லை என்று சொல்ல எம் எஸ் பாஸ்கரை கண்டு பிடிக்கும் முயற்சியில் போலிஸ் அதிகாரியான கதாநாயகன் தமன்குமார் விசாரணையில்இறங்கி வேலா ராமமூர்தியையும்அவரது ஆட்களையும் அரெஸ்ட் செய்து கஸ்டடியில் வைத்து எம் எஸ் பாஸ்கர் எங்கே என்று விசாரிக்கும் வேளையில் அவருக்கு ஒரு போன் வருகிறது. ஒரு பெண்ணை யாரோ கொலை செய்துள்ளார்கள்என்று. தமன்குமார் செய்தி கேட்டு சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கிறார் இந்த பெண்ணை யார் கொலை செய்தார்கள் என்ற விசாரனையும் தமனுக்கு கூடுதல் டென்ஷன் ஏற்படுத்த எம் எஸ் பாஸ்கர் என்ன ஆனார்? பெண்ணை கொலை செய்தது யார்? என்பதை விறுவிறுப்பாக எல்லோரும் ரசிக்கும்படியாக சொல்லியிருப்பதே படத்தின் மீதிக்கதை. போலிஸ் அதிகாரியாக தமன்குமார் நன்றாக நடித்துள்ளார். எம்.எஸ். பாஸ்கர், ஶ்ரீரஞ்சனி இருவரும் சிறப்பாக நடித்துள்ளனர். சொத்தை அபகரிக்கும் ரவுடியாக வேலா ராமமூர்த்தி கொடுத்த கதாபாத்திரத்தை சிறப்பாக செய்துள்ளார். MLA வாக பழ கருப்பையா நடிப்பில் அசத்தியுள்ளார். மற்றும் இதில் நடித்த தீபா ஷங்கர்,அருண்கார்த்தி, கஜ ராஜ் என அனைவருமே சிறப்பாக நடித்துள்ளனர். K G ரத்தீஷின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம். சஞ்சய் மாணிக்கம் இசையில் பாடலும் பிண்ணனி இசையும் ரசிக்கவைக்கிறது. எடுத்துக் கொண்ட திரில்லர் கதையை சுவாராஸ்யத்துடன் எல்லோரும் ரசிக்கும்படி சொல்லி வெற்றிப் படமாக கொடுத்துள்ளார் இயக்குநர் B.மணிவர்மன். பாராட்டுக்கள்.




**ஹரி இயக்கத்தில் விஷால், பிரியா பவானி ஷங்கர் நடித்து வெளியாகியிருக்கும் படம் ரத்னம்.**

**கதை**

சிறுவயதில் ரத்தினத்தை (விஷால்) காப்பாற்ற ரத்தினதின் தாய் மார்க்கெட்டில் வேலை செய்கிறார். விபச்சார லேடி கும்பல் ரத்தினத்தை கடத்தி வைத்துக்கொண்டு தாயை விபச்சாரத்தில் ஈடுபடவைக்கும்போது போலீஸாரால்கைது செய்யப்படுகிறார். இதனால்போலிஸ் நிலையத்திலேயே தற்கொலை செய்து கொள்கிறார். தாயை அடக்கம் செய்ய சமுத்திரக்கனி உதவுகிறார். தாயை இழந்த விஷால் தன்னை அரவணைக்கும் பன்னீர் செல்வத்துக்காக (சமுத்திரகனி) கொலை ஒன்றை செய்து விட்டு சிறார் கூர்நோக்கு இல்லத்துக்குச் செல்கிறார். தண்டனைக் காலம் முடிந்து அவர் வெளியே வரும்போது, எம்எல்ஏவாக மாறியிருக்கிறார் சமுத்திரக்கனி எம்.எல்.ஏ சமுத்திரகனியின் அடியாளாக இருக்கிறார் விஷால். ஊரில் யாராவது ஏதாவது தப்பு செய்தால் அவரை புரட்டி எடுக்கிறார் கொலை செய்கிறார். அவர் செய்த கொலைக்காகயோகிபாபு சிறைக்கு செல்வார். நீட் தேர்வு எழுத வந்த பிரியா பவானி சங்கரை பார்த்தவுடன் பிடித்து விடுகிறது. ஆனால் ப்ரியா பவானி ஷங்கரை ஒரு ஆந்திரா கூலிப்படை கும்பல் கொல்ல வருகிறது. இதை தெரிந்தகொண்ட விஷால் அவருக்கு பாதுக்காப்பு கொடுக்க, பிறகு தான் தெரிகிறது, ஒரு நிலப்பிரச்சனையில் ப்ரியா பவானி ஷங்கர் குடும்பத்தையே அழிக்க, ஆந்திராவின் ராயுடு பிரதர்ஸ் தேடி வர, இந்த பிரச்சனை தெரிந்து கொண்ட விஷால் பிரியா பவானி ஷங்கருக்கு ஆதரவாக இருக்கிறார். ராயுடு பிரதர்ஸ் விஷலை கொள்ள முயல்கிறது. அவர்களிமிருந்துதப்பித்தாரா விஷால்? ராயுடு ராயுடு பிரதர்ஸ் விஷலை கொள்ள முயல்கிறது. அவர்களிமிருந்துதப்பித்தாரா விஷால்? ராயுடு பிரதர்ஸிடமிருந்து நிலத்தை மீட்டு ப்ரியா பவானி ஷங்கர் குடும்பத்தை காப்பாற்றினாரா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை. விஷால் சண்டைக் காட்சிகளில் சிறமப்பட்டு நடித்து கைதட்டல் பெறுகிறார். நடனத்திலும் நடிப்பிலும் அத்துகிறார். பிரியா பவானி ஷங்கர் கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தைசிறப்பாக செய்துள்ளார். எம் எல் ஏ வாக சமுத்திரக்கனி சிறப்பாக நடித்துள்ளார். யோகிபாபு, மொட்டை ராஜேந்திரன் வரும் இடங்கள் கலகலப்பு.கௌதம் வாசதேவ் மேனன், முரளி ஷர்மா,ராமச்சந்திர ராஜு,மோஹன் ராமன்

Faa முஸ்தபா. விஜயகுமார், ஜெயபிரகாஷ், கணேஷ் வெங்கட்ராமன், YG மகேந்திரன் என் இதில் நடித்திருக்கும் அனைவருமே சிறப்பாக நடித்துள்ளனர். M சுகுமாரின் ஒளிப்பதிவு படத்திற்கு பிளஸ். தேவி பிரசாத் இசையில் பாடல்களும் பிண்ணனி இசையும் ரசிக்க வைக்கிறது. ஆக்ஷன் காட்சிகள் அசத்தல். இயக்குநர் ஹரி படம் என்றாலே கமர்ஷியல் கலந்து ஆக்ஷன் படத்தை எல்லோரும் ரசிக்கும்படி கொடுப்பார். இந்த படத்திலும் அதை நிறைவாக செய்துள்ளார். பாராட்டுக்கள்.

**நடிகர் சிவகார்த்திகேயன் வெளியிட்ட 'ராபர்' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர்!**

**'மெட்ரோ' சத்யா நாயகனாக நடிக்கும் 'ராபர்'**

சென்னையில் நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தின் பின்னணியில் உருவாகி இருக்கும் படம் 'ராபர்'. இப்படத்திற்கு 'மெட்ரோ 'திரைப்படத்தின் இயக்குநர் ஆனந்த கிருஷ்ணன் கதை திரைக்கதை எழுதியுள்ளார். எஸ். எம்.பாண்டி இயக்கி உள்ளார். இம்ப்ரஸ் ஃபிலிம்ஸ் சார்பில் பத்திரிகையாளர் கவிதா எஸ் தயாரித்துள்ளார்.




பல்வேறு கிராமங்களில் இருந்து தினமும் சென்னைக்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் தான் இக்கதையின் நாயகன். ஒரு கிராமத்திலிருந்து சென்னையை நோக்கி வேலை தேடி வருகிறான் நாயகன்.சென்னையின் பகட்டும் பளபளப்பும் அவனைக் கவர்கின்றன.மாநகர மக்களின் ஆடம்பர வாழ்க்கை மேல் அவனுக்குப் பிரமிப்பும் ஈர்ப்பும் வருகின்றன. தானும் இது போல் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறான். ஆசை வெட்கம் அறியாது; அதை அடையும் வழியின் ஆபத்தையும் உணராது .நாயகன் தன் விருப்பத்தை அடையும் வழி கடினமாக இருக்கவே குறுக்கு வழியைத் தேர்ந்தெடுக்கிறான்.'உலக மக்களின் துன்பங்களுக்குக் காரணம் ஆசையே' என்றார் புத்தர்.'நிலத்தில் விளையும் களைகள் பயிர்களைப் பாதிக்கின்றன; மனதில் விளையும் ஆசைகள் மனிதனின் குண நலன்களைப் பாதிக்கின்றன' என்கிறது தம்மபதம். நாயகனின் ஆசை பேராசையாகி வெறியாக மாறுகிறது. அவனது குறுக்கு வழி திருட்டு வழியாக மாறுகிறது. ஆம்.அவன் திருட்டுத் தொழிலில் இறங்குகிறான். நாயகன் தேர்ந்தெடுத்த பாதை அவன் வாழ்க்கையை எப்படிப் பாதிக்கிறது என்பதே 'ராபர்'படத்தின் கதை. இப்படத்தின் கதை, திரைக்கதையை 'மெட்ரோ' , 'கோடியில் ஒருவன்' படங்களின் இயக்குநர் ஆனந்த கிருஷ்ணன் எழுதியுள்ளார்.

'ராபர்' படத்தை தனது இம்ப்ரஸ் ஃபிலிம்ஸ் சார்பில் பத்திரிகையாளர் எஸ் .கவிதா தயாரித்துள்ளார். இவர் ஊடகத்துறையில் சுமார் 20 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறவர்.இவர் ஏற்கெனவே சில குறும்படங்களையும் ஆவணப் படங்களையும் தயாரித்துள்ளார். 'எண்ணம் போல் வாழ்க்கை' என்ற ஆல்பத்தையும் உருவாக்கி உள்ளார். அதை இசை அமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா தனது வலை தளத்தில் வெளியிட்டார். பிரபல நகைச்சுவை நடிகர் ஜனகராஜை பிரதான பாத்திரம் ஏற்க வைத்து 'தாத்தா' என்கிற குறும்படத்தையும் தயாரித்துள்ளார் .அந்தப் படம் ஷார்ட் ப்ளிக்ஸ் சேனலில் விரைவில் வெளியாக உள்ளது.

தயாரிப்பாளர் கவிதா 'ராபர்' படம் பற்றிப் பேசும்போது, 'உண்மைச் சம்பவத்தை மையமாக வைத்து இந்தப் படம் உருவாகி இருப்பதால் காட்சிகளும் உண்மைக்குப் பக்கத்தில் இயல்பாக இருக்கும். 'ராபர்' படத்துக்கான படப்பிடிப்பு சென்னைக்குள் இருக்கும் தியாகராய நகர், வேளச்சேரி போன்ற இடங்களிலும் சென்னையைச் சுற்றியுள்ள செம்மஞ்சேரி, கிழக்கு கடற்கரை சாலை, பழைய மகாபலிபுரம் சாலை போன்ற பகுதிகளிலும் நடைபெற்றுள்ளது. அப்படி ஒரு காட்சியை செம்மஞ்சேரி குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் படமாக்கிக் கொண்டிருந்தோம். அப்போது படத்தில் திருடனாக நடித்துக் கொண்டிருந்த துணை நடிகரை உண்மையான திருடன் என நினைத்து அப்பகுதி மக்கள் தாக்கி விட்டனர். இது படத்தின் காட்சிகள் இயல்பாக இருப்பதற்கான ஒரு சின்ன உதாரணம் என்று சொல்வேன். நகர்ப் பகுதிகளில் குறிப்பாக மாநகரங்களில் நடைபெறும் குற்றச் செயல்களின் பின்னணியில் கஞ்சா, மது மற்றும் போதைப் பொருள்களின் புழக்கம் இருப்பதாகக் குற்றவியல் சார்ந்த புள்ளி விவரம் கூறுகிறது .இது போன்ற போதைப் பழக்கங்கள் இளைஞர்களை முன்னேற விடாமல் ,சிந்திக்க விடாமல் குற்றச் செயல்கள் செய்யத் தூண்டுகிறது என்பது ஒரு கசப்பான உண்மை. அதைப் பார்ப்பவரை உணரவைக்கும்படி இந்தப் படம் அமைந்திருக்கும்.

**இந்த' ராபர்' திரைப்படம் படத்தின்' டைட்டில் ஃபர்ஸ்ட் லுக் 'எனப்படும் தலைப்பின் முதல் தோற்றத்தை நடிகர் சிவகார்த்திகேயன் வெளியிட்டுள்ளார்.**

# அச்சாரம்

ACCHARAM

பல்சுவை மாத இதழ்

Tamil Monthly

வ.எண். ________

## பத்திரிகை சந்தாதாரர் படிவம்

Passport Size Photo

பெயர்________________________ த.பெ.________________________

நிரந்தர முகவரி________________________________________________

________________________________________________

பாலினம்______________ தொழில்________________________

ஆசிரியர் அவர்களுக்கு, நான் மேற்காணும் விலாசத்தில் வசித்து வருகிறேன். தங்களின் அச்சாரம் பத்திரிகைக்கு **(ஆயுள்/ஆண்டு)** // சந்தாதாரராக / நன்கொடையாளராக விரும்புகிறேன். கீழ்காணும் முகவரியில் எனக்கு பத்திரிகையை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## சந்தா கட்டண விபரம்

| | | | ✔ |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | – | ரூ.5,000/– | ☐ |
| பத்தாண்டு சந்தா | – | ரூ.2,500/– | ☐ |
| ஆண்டு சந்தா | – | ரூ.250/– | ☐ |
| நன்கொடை | – | ரூ. | ☐ |

<u>பத்திரிகை அனுப்ப வேண்டிய முகவரி</u>

திரு/திருமதி________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

தொலைபேசி எண்________________ கைப்பேசி______________ இ.மெயில்____________

நாள்:

இடம்: சந்தாதாரர் கையொப்பம்

படிவம் மற்றும் சந்தா கட்டணத்தை ஆசிரியர், அச்சாரம், SF1 இரண்டாம் தளம் 5/10 அண்ணா காலனி விருகம்பாக்கம் சென்னை–600092 என்கிற முகவரிக்கு அனுப்பவும். டிடி அல்லது காசோலைகளை அச்சாரம் என்கிற பெயரில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். சந்தாதாரர்களுக்கு பின்னர் பணப்பற்று ரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

<u>வங்கி கணக்கு விவரம்:</u>

**ACCHARAM - Current Account**

**Acc.No: 6565766161**
**Indian Bank, Saligramam Branch**
**IFS Code: IDIB000S082**

**அறிமுக இயக்குநர் தன்ராஜ் இயக்கத்தில் தயாரிப்பளர் பிருத்தவி போலவரபு தயாரிப்பில் அறிமுக இயக்குநர் தன்ராஜ் இயக்கத்தில், சமுத்திரக்கனி நடித்திருக்கும் ராமம் ராகவம் திரைப்படத்திம் டீசர் வெளியீட்டு விழா.**

பிருத்தவி போலவரபு – தயாரிப்பாளர்.

சமுதிரக்கனி அண்ணனின் உதவி இல்லாமல் இந்த படத்தை என்னால் தயாரித்து இருக்க முடியாது. இந்தப்படம் உருவாக மிக முக்கியக்காரனமாக இருந்தவர் கனி அண்ணந்தான். தந்தை மகன் உறவுச் சிக்கல் குறித்து பேசும் இப்படம் சிறப்பாக வந்திருக்கிறது கட்டாயம் மக்களுக்கும் பிடிக்கும் என்று நம்புகிறேன்.

நடிகை மோக்ஷா...

தமிழில் இது என்னுடைய முதல் படம். எனக்கு தமிழ் திரைப்படங்களை மிகவும் பிடிக்கும் தமிழ் ரசிகர்களையும் பிடிக்கும் தமிழ்ரசிகர்கள் கட்டாயம் ஆதரவு கொடுப்பார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஒளிப்பதிவளர்.

அண்ணன் சமுத்திரக்கனி எல்லா கதாபாத்திரங்களுக்கும் பொருந்தக்கூடியவர். அப்பா கதாப்பாத்திரத்தில் அவர் நடித்த எல்லா படங்களும் வெற்றி பெற்றிருக்கிறது அதே போல் இந்த படமும் வெற்றி பெற என் வாழ்த்துகள்.

நடிகர் தீபக்.

கனி சார் எடுக்கக்கூடிய நடிக்கக்கூடியப் படங்கள் எப்போதும் சிறந்த கருத்துகளை அடங்கிய படங்களாக இருக்கும் இந்த படத்திலும் நல்ல கருத்துகளோடு வருகிறார் என்று ரசிகர்களைப் போல் நானும் நம்பிக்கையாக இருக்கிறேன் படம் வெற்றி பெற என் வாழ்த்துகள்.




நடிகர் ஹரிஷ்.

ஒரு நேர்மையான கதைக் களத்தோடு இந்தப்படம் வருகிறது. எப்போதும் ஸ்ரீலிவிவிஷ்மிஷ்ஸள ஸஷ்ணுள உடையவர் கனி அண்ணன்.எல்லா படங்களைப் போலவும் இந்தப் படத்திற்கு அவரது முழு உழைப்பை அளித்திருப்பார் கட்டாயம் இந்த படம் வெற்றி பெற வாழ்த்துகள்.

நடிகர் பாபி சிம்ஹா.

ராமம் ராகவம் படத்தின் இயக்குநர் தன்ராஜ் என்னுடைய நண்பர். கடுமையாக உழைக்கக்கூடியவர் 7 மகனுக்கும் அப்பாவுக்கும்மான உறவு பற்றிய கதையை என்னிடம் சொன்னார். வியப்பாக இருந்தது. அப்பா கதாபாத்திரம் யார் என்று இனி இந்தப் படம் அவருடையது இந்தப் படத்தை அவர் எப்படி கொண்டு போகிறார் என்பதை மட்டும் பாருங்கள் என்றேன். அதைப் போலவே இந்த படம் அருமையாக வந்திருக்கிறது என்று நம்புகிறேன் படம் வெற்றி பெற வாழ்த்துகள்.

இயக்குநர் பாண்டிராஜ்

கூட பிறக்காத அண்ணன் கனி அண்ணன். கதைகளைத் தூக்கிக்கொண்டு ஒவ்வொரு அலுவலகமாக செல்வோம். அப்படி சசி குமார் அண்ணன் அலுவலகத்தில் எனக்கு முன்பாக அமர்ந்திருந்தார் வாவா உனக்கு முன்னாடியே வந்துட்டேன்னு சொன்னாரு. அப்படிதான் அண்ணனோடு எனக்கு அறிமுகம் . .

பசங்க படத்தில் அன்பு அப்பாவின் கதாபாத்திரத்திற்கு கனி அண்ணா தான் டப்பிங் பண்ணி கொடுத்தார். அண்ணன் கிட்ட ஒரு குணம் இருக்கிறது. பெரிய கம்பெனி கிட்ட வாங்கி இல்லாதவங்களுக்கு கொடுப்பாரு சின்ன கம்பெனி புது இயகுநர் படத்திற்கு சும்மா நடித்து கொடுப்பார். அப்படி நான் என்னுடைய பல படங்களுக்கு உதவி இருக்கிறார். தன்னுடைய படமாக இருந்தாலும் சரி வேறொருவர் இயக்குகிற படமாக இருந்தாலும் தன்னுடைய முழு உழைப்பையும் கொடுக்கக்கூடியவர். இந்த படத்திலும் அவருடைய உழைப்பை டீசரில் பார்க்க முடிந்தது. இந்தப்படம் வெற்றி பெற என் வாழ்த்துகள்.

நடிகர் தம்பி ராமையா

அரசியலில் கிங்மேக்கர்கள் எத்தனை காலம் கடந்தும் தடம் பதிப்பார்கள், அதுபோல தமிழ் சினிமாவில் ஹீரோ மேக்கர்ஸ் பாலா சார், தம்பி பாண்டிராஜ் ஆகியோர்கள்.

அன்பினால் எல்லோரிடமும் உறவுக்காரராக மாறிவிடுபவர் சமுத்திரக்கனி என்னுடைய அருமை தம்பி. அவர் இந்த படத்தில் தந்தை கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இன்றய சூழலில் அப்பா செண்ட்மெண்ட் திரைப்படங்கள் தேவைப்படுகிறது. படம் வெற்றி பெற என் வாழ்த்துகள்.

நடிகர் சூரி.

வெண்ணிலா கபடிக்குழு படத்தில் பரோட்டா காமெடி இங்க ஹிட் ஆனது போல தெலுங்கில் பெரிய ஹிட். அந்த காமெடியை தன்ராஜ்தான் நடித்ததாக சொன்னார். அப்போதிலிருந்து அவர் என்னுடைய நம்பராக அறிமுகமானார்.

அப்பா மகன் உறவு தொடர்பான கதையம்சம் கொண்ட படங்கள் தோல்வி அடைந்ததாக சரித்திரம் இல்லை. இந்தப்படமும் கட்டாயம் வெற்றி பெரும். ஒரு படம் எடுப்பதை விட மக்களிடம் கொண்டு சேர்பதுதான் சிரமமாக இருக்கிறது. இந்த படத்தை மக்களிடம் கொண்டு செல்ல நிறைய சிரமம் எடுத்துள்ளனர். கனி அண்ணன் நெகட்டிவாக பேசினதா நான் கேட்டதே



இல்லை.. உங்கள் உழைப்பு இந்தப்படத்திலும் அதிகம் இருக்கும் என்று நினைக்கிறேன் படம் வெற்றி பெற என் வாழ்த்துகள்.

இயக்குனர் தன்ராஜ்.

இந்த நாளுக்கும் என் அப்பா அம்மாவுக்கும் நன்றி. சிவபிரசாத் எழுத்தாளரின் கதை இது. இந்த கதை குறித்து கனி அண்ணனிடம் கூறினேன். கதையை நீயே இயக்க வேண்டும் என்று கூறினார். எனக்கு ஒரு தயக்கம் இருந்தது நான் நடித்த படங்களில்

இந்த நாளுக்கும் என் அப்பா அம்மாவுக்கும் நன்றி. சிவபிரசாத் எழுத்தாளரின் கதை இது. இந்த கதை குறித்து கனி அண்ணனிடம் கூறினேன். கதையை நீயே இயக்க வேண்டும் என்று கூறினார். எனக்கு ஒரு தயக்கம் இருந்தது நான் நடித்த படங்களில் வேலை பார்த்த இயக்குனர்களிடமிருந்து நான் கற்றுக்கொண்டதை வைத்து படத்தை இயக்கி இருக்கிறேன். சமுத்திரக்கனி அண்ணன் இல்லையென்றால் இந்த படம் உருவாகி இருக்காது.

அண்ணனைப் போல நல்ல கதைகள் ஆதரித்து ஊக்கம் அளித்தால் சினிமாவிற்கு நல்ல திரைப்படங்கள் வரும்.

ஒவ்வொருவரும் தன் அப்பாவோடு வந்து கட்டாயம் இந்தப் படத்தை பாருங்கள்.

சமுத்திரக்கனி.

நெகிழ்வான தருணம். ஒவ்வொரு தகப்பனும் ஒரு சகாப்தம். 10 அப்பா படம் பண்ணிட்டேன் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதை. இதுவும் அப்படியான வேறொரு கதை.
தன்ராஜிக்கு தகப்பனும் இல்லை தாயும் இல்லை. தானே உழைத்து இந்த இடத்திற்கு வந்திருக்கிறார். அப்பா என்றாலே ஒரு வேதியல் மாற்றம் நிகழும் அப்பா கதை என்றாலே வாங்க கேட்ப்போம் பண்ணுவோம் என்று சொல்லி விடுவேன்.
வெறும் நம்பிக்கையை மட்டுமே வைத்திருப்பவர்கள் சிறப்பாக படம் பண்ணிடுவாங்க தன்ராஜை அப்படி நம்பி இந்த படத்துக்குள்ள வந்தேன். ஒவ்வொரு தகப்பனுக்கும் மகனுக்கும் உள்ள உறவுக்குள் அவ்வளவு சிக்கல்கள் இருக்கு. இன்னும் 10 படம் கூட பண்ணலாம். தயாரிப்பாளரை நான் பார்த்ததே இல்லை. படபிடிப்பில்தான் முதல் முறையாம பார்த்தேன். என்னைப் பார்க்காமலே என் மீது நம்பிக்கை வைத்த தம்பி. மாபெரும் உறவோடு வந்து இருக்கிறார் வாழ்த்துகள் தம்பி. இந்த படத்தை இயக்க தன்ராஜ் வேரொரு இயக்குநரை அழைத்து வந்தார். இந்த படத்தை எடுக்க ஒரு நல்ல இயக்குநரை கொண்டு வாருங்கள் என்றேன். இயக்குனர் கிடைப்பதில் சிக்கல் இருப்பதாகச் சொன்னார் நீயே படம் பண்ணுனு சொன்னேன் இயக்குனராக மாறி இருக்கிறார். இந்தப் படத்திற்கு ஒரு வெளிச்சம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இயக்குனர் பாலா...

சமுத்திரக்கனியின் மாபெரும் ரசிகனாக நான் வந்திருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நடிகனாக அவர் நிரூபித்து விட்டார். அவருடைய உழைப்பிற்கும் நான் ரசிகன்தான். கடுமையாக உழைக்கக்கூடியவர். மற்றவர்களுக்கு உதவக்கூடிய அவருடைய தன்மை எனக்கு வியப்பாக இருக்கும். உதவுவதில் அவருக்கு பெரிய மனசு இருக்கு. இந்த படம் வெற்றி பெற என் வாழ்த்துகள்.

*சங்கடஹர சதுர்த்தி என்றால் என்ன? கடைப்பிடிப்பதால் ஏற்படும் பலன் என்ன?*

*விநாயகர் முழு முதற்கடவுள் ஆவார். விநா யகர் என்ற சொல்லுக்கு 'தனக்கு மேலே வேறொரு தலைவன் இல்லாதவன்' என்று பொருள். விக்னங்களுக்கு அதிபதியான அவர், நாம் தொடங்கும் சுபகாரியங்களுக்கு இடையூறு எதுவும் ஏற்படாமல் அருளாசி புரிகிறார்.*

*நினைத்த காரியம், தொடங்கும் செயல்க ள் எதுவாயினும் இலகுவாக முடிய, விநா யகரின் திருவருள் முக்கியமானது. அதனால் தான் எந்த ஒரு செயலையும் தொடங்கும் போது, விநாயகர் பூஜையை முதலில் செய்கின்றனர்.*

*சங்கடஹர சதுர்த்தி என்றால் என்ன?*
*கடைப்பிடிப்பதால் ஏற்படும் பலன் என்ன?*

*சங்கம் என்றால் சேருதல் என்று பொருள். கஷ்டம் மனிதனின் வாழ்வில் சேருவதே (சங்+கஷ்டம்) சங்கஷ்டம் என்ற சொல்லா ல் குறிப்பிடப்படுகிறது. இந்த சங்கஷ்டமே பின்பு 'சங்கட'மாக மருவி, உருமாற்றம் பெற்று விட்டது. சங்கடத்தை நீக்குவதே சங்கடஹர சதுர்த்தியாகும்.*

ஒவ்வொரு மாதமும் பவுர்ணமிக்கு அடுத்து வரும் நான்காம் நாள் சங்கடஹர சதுர்த்தியாகும். இது இருள் சூழும் மாலை நேரத்தில் வரும். நமக்கு வரும் துன்பங்க ளை, தடைகளை, கஷ்டங்களை தேய்த்து அழிப்பதற்காக ஏற்பட்ட ஒரு சிறப்பு மிக்க விரதம் இது. மனிதருக்கு மட்டும் அல்ல. தெய்வங்களுக்கும், தேவர் களுக்கும் கூட கஷ்டங்கள் வந்த போது அவர்கள் பிள்ளை யாரை வணங்கி நலம் பெற்றுள்ளனர்.

முன்பு ஒரு காலத்தில் பிரம்மன், சிவபெரு மானை தரிசிக்க திருக்கயிலாயத்திற்கு சென்றார். அப்போது நாரதர் அங்கே ஒரு கனியுடன் வந்திருந்தார். அந்த தெய்வீகக் கனியை முருகனுக்கு கொடுக்கும் படி பிரம்மதேவன் சிவபெருமானிடம் கூறினார்.

சிவனும் அந்தப் பழத்தை முருகனிடம் வழ ங்கினார். இதைப்பார்த்த மூத்த பிள்ளை யான விநாயகருக்கு எரிச்சல் வந்தது. அவர் பிரம்மதேவனை கோபத்துடன் பார்த்தார

# டிஜிட்டல் யுகத்தின் கொசு!

—பாப்பனப்பட்டு வ.ஃமுருகன்



ஆய்வு ஒன்றில், மொபைல் போனை கழிவறையில் உபயோகிப்பது பற்றிய, அதிர்ச்சி அறிக்கை ஒன்று வெளியானது.

அந்த அறிக்கையின்படி, மொபைல் போனை கழிவறையிலும் பயன்படுத்தும் பழக்கம் இருப்பவர்கள், கிருமிகளை கரம்கூப்பி வரவேற்கிறார்கள் என்று அர்த்தமாம்.

ஏனெனில், மொபைல்போன், கழிவறையின் இருக்கையை விட அழுக்காகவும், அதிக கிருமிகள் நிறைந்தும் இருக்குமாம்.

ஒரு நாளில் தவிர்க்கவே முடியாத உபகரணத்தின் பெயரைச் சொல்லும்படி மக்களிடம் கேள்வி கேட்கப்பட்டால், கிட்டதட்ட அனைவருமே, மொபைல் போன் என்று தான் கூறுவார்கள்.

அந்த அளவுக்கு, இண்டர்நெட் பிரவுசிங் முதல், அலுவலகப் பணி, மின்னஞ்சல்களுக்குப் பதிலளிப்பது, நண்பர்களுடன் பேசுவது மற்றும் பொழுதுபோக்கு என, நவீன மொபைபோன்களின் பயன்பாடு அதிகம்.

கழிவறையில் இருக்கும் போதும், மொபைல் போன்களை பயன்படுத்தும் பழக்கத்தை, பலரும் கொண்டுள்ளனர்.

ஓர் ஆய்வின்படி, 10 பேரில் ஆறு பேர், அதிலும் குறிப்பாக, இளைஞர்கள், தங்கள் ஸ்மார்ட்போனை கழிவறைக்கு எடுத்துச் செல்கிறார்களாம்.

அந்த ஆய்வில் பங்கேற்றவர்களில், 61.6 சதவிகிதம் பேர், கழிவறை இருக்கையில் அமர்ந்து, பேஸ்புக், ட்விட்டர் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற, சோஷியல் மீடியாவை பிரவுஸ் செய்ததாகக் கூறியுள்ளனர்.

கழிவறையில் பயன்படுத்துவதன் மூலம், நடப்பு செய்திகள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதாகக் கூறியுள்ளனர்.

அந்த ஆய்வில் பதிலளித்தவர்களில், 33.9 சதவிகிதம் பேர், தங்கள் ஸ்மார்ட்போன்களை கழிவறையில் பயன்படுத்துவதன் மூலம், நடப்பு செய்திகள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதாகக் கூறியுள்ளனர்.

அதுமட்டுமின்றி, அந்த ஆய்வில் பங்கேற்று பதிலளித்தவர்களில், 24.5 சதவிகிதம் பேர், தங்கள் அன்புக்குரியவர்களுக்கு செய்தி அனுப்ப அல்லது அவர்களை அழைத்து உரையாடுவதற்கு, அந்த நேரத்தைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர்.

இந்தப் பழக்கம், மேலோட்டமாக பார்க்கும் போது, பாதிப்பில்லாததாக தோன்றினாலும், அது, மனித ஆரோக்கியத்திற்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

தொடுதிரைகள், தொற்று நோய்களை ஏற்படுத்தும் ஆபத்தைக் கொண்டிருக்கும் காரணமாக, அது, ‘டிஜிட்டல் யுகத்தின் கொசு‘ என்று பெயரிட்டுள்ளார், தொற்றுக் கட்டுப்பாட்டு நிபுணரான டாக்டர் ஒருவர்.

குறிப்பாக, கிருமிகள், மொபைல் போன் திரைகளில், 28 நாட்கள் வரை உயிர்வாழ முடியுமாம். இதனால் மொபைல் பொன்கள், நோய்க் கிருமிகள் இனப்பெருக்கம் செய்யும் இடமாக இருக்குமாம்.

இந்த நோய்க் கிருமிகள், சிறுநீர் பாதை முதல் சுவாசம் மற்றும் சரும நோய்த் தொற்றுகள் வரை, பல்வேறு உடல்நல சிக்கல்களை ஏற்படுத்துமாம்.

ஆபத்தை விளைவிக்கும் கிருமிகள், மனிதரின் வாய், கண்கள் அல்லது மூக்குடன் தொடர்பு கொள்வதன் மூலம், உடலுக்குள் எளிதில் நுழையுமாம்.

எனவே, கழிவறையில் மொபைல் போன்களைப் பயன்படுத்துவது, ஆரோக்கிய கேடு என்றுணர்ந்து, அப்பழக்கத்தைத் தவிருங்கள். கழிவறையில், பொழுதுபோக்குகளை விட, சுகாதாரத்திற்கு முன்னுரிமை கொடுங்கள். இந்த நோய்க் கிருமிகள், சிறுநீர் பாதை முதல் சுவாசம் மற்றும் சரும நோய்த் தொற்றுகள் வரை, பல்வேறு உடல்நல சிக்கல்களை ஏற்படுத்துமாம்.

ஆபத்தை விளைவிக்கும் கிருமிகள், மனிதரின் வாய், கண்கள் அல்லது மூக்குடன் தொடர்பு கொள்வதன் மூலம், உடலுக்குள் எளிதில் நுழையுமாம்.

எனவே, கழிவறையில் மொபைல் போன்களைப் பயன்படுத்துவது, ஆரோக்கிய கேடு என்றுணர்ந்து, அப்பழக்கத்தைத் தவிருங்கள். கழிவறையில், பொழுதுபோக்குகளை விட, சுகாதாரத்திற்கு முன்னுரிமை கொடுங்கள்.

## நிதர்சனம்

**படித்தாலும் புரியாத**
**புத்தகம் மனைவி...**

**படிக்கத் தவறிய**
**புத்தகம் தந்தை...**

**படிக்க விரும்பும்**
**புத்தகம் அன்னை...**

**படித்ததும் பிடிக்கும்**
**புத்தகம் பிள்ளை...**

**தொலைக்கவே கூடாத**
**புத்தகம் வாழ்க்கை...**

**– ரஞ்சித் பாரிஜாதம்.**

# கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் வெற்றி: குகேஷுக்கு ரூ.75 லட்சம் ஊக்கத் தொகை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.



கேண்டிடேட் செஸ் தொடரில் வெற்றி பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த செஸ் வீரர் டி.குகேஷுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.75 லட்சத்துக்கான காசோலை மற்றும் கேடயத்தை வழங்கி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை, கனடாவின் டொராண்டா நகரில் நடைபெற்ற கேண்டிடேட் செஸ் தொடரில் வெற்றி பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த செஸ் வீரர் குகேஷ் இன்று சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது குகேஷுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.75 லட்சத்துக்கான காசோலை மற்றும் கேடயத்தை முதல்வர் வழங்கினார்

# 2024 மே மாத ராசி பலன்கள்

## மேஷம்

இந்த மாதம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிட்டலாம். உங்கள் முயற்சிகளில் நீங்கள் நேர-மறை மாற்றங்களைக் காணலாம். உங்கள் தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்வில் ஏற்படும் அனுகூலமான மாற்றங்கள் உங்களை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்லலாம். பொருளா-தார ரீதியாகவும் நீங்கள் முன்னேற்றம் காண பல வாய்புகள் காணப்படல-ாம். உங்கள் சேமிப்பு மேம்படலாம். குடும்ப உறு-ப்பினர்களின் தேவைகளை நிறைவேற்ற போதிய பணம் உங்களிடம் இருக்கலாம்.இந்த மாதம் நீங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் செயல்படல-ாம். உங்கள் கனவுகள் யாவும் நனவாகல-ாம். உங்கள் பெயரும் புகழும் கூடலாம். கடந்த காலத்தில் இருந்து வந்த கவலைகள் நீங்கலாம். மனச்சோர்வு நீங்கலாம். மனதில் அமைதி குடிெ-காள்ளலாம். இந்த காலகட்டம் உங்கள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு நல்லது. உங்க-ளின் வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு கிட்டும். திருமணத்திற்கு முயற்சி செய்பவர்களுக்கு இந்த மாதம் அனுகூலமான பலன் கிட்டும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பிறக்கும்.



## ரிஷபம்



**சிலருக்கு புதிய வீடுகளுக்கு மாறும் சூழ்நிலை உண்டாகும். பணவரவும் திருப்திகரமான நிலையிலேயே இருக்கும். உங்களின் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் கிடைக்கும் செய்தொழிலில் புதிய மாற்றங்களைப் புகுத்துவீர்கள். புதிய கடன்களும் கிடைக்கும். உடல் ஆரோக்யமும் சிறப்பாகவே தொடரும். வழக்கு விவகாரங்களில் சாதகமான திருப்பங்கள் உண்டாகும். மனதில் காரணமில்லாமல் குடிகொண்டிருந்த குழப்பங்களும் மறையும். உற்றார் உறவினர்கள், நண்பர்கள் உங்களை அனுசரித்து நடந்து கொள்வார்கள். இரண்டுபட்டிருந்த குடும்பம் ஒன்று சேரும். வந்தவர்களின் திட்டம் செயல்வடிவம் பெறும். இதுவரை வேலை உங்களின் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் கிடைக்கும் செய்தொழிலில் குடும்பச் சூழலில் இன்பகரமான மாற்றங்களைக் காண்பீர்கள். என்று நீண்டகாலம் திட்டமிட்டு சொந்த வீடு வாங்க வேண்டும் என்று நீண்டகாலம் திட்டமிட்டு வந்தவர்களின் திட்டம் செயல்வடிவம் பெறும். இதுவரை வேலை தேடி அலைந்தவர்கள் இப்போது ஒரு நல்ல வேலை கிடைக்கப் பெறுவீர்கள். மனநிறைவைப் பெறக்கூடிய வகையில் லாபம் கணிசமான அளவுக்கு உயரும். கலைத்துறையினருக்கு: புதிய வாய்ப்புகள் எளிதில் கிடைக்கக் கூடிய காலகட்டம் என்பதால் நீங்கள் பெரும் முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லாமலேயே வாய்ப்புகள் தேடி வரும் உங்கள் புகழும் பொருளாதார அந்தஸ்தும் உயரக்கூடிய வாய்ப்புண்டு**

## மிதுனம்

**மிதுன ராசிக்காரர்களுக்கு சுப விரையங்களை கொடுப்பார். நிறைய வருமானம் வந்தாலும் சுப விரைய செலவுகள் அதிகரிக்கும். வீடு கட்டும் யோகம் கைகூடி வரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். வண்டி வாகனம் வாங்கலாம். பணத்தை சேமிக்க பாடு பட்டாலும் முடியாது மருத்துவ செலவுகள் ஏற்படும். கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படாமல் இருக்க மவுன விரதம் இருப்பது அவசியம். பண முதலீடுகளில் கவனம் தேவை. அகலக்கால் வைக்காதீர்கள் ஆபத்தாகி விடும். தொழில் வியாபாரத்தில் செய்யும் முதலீடுகளில் கவனம் தேவைப்படும் எனவே ஒருமுறைக்கு இருமுறை யோசித்து முடிவு செய்வது நல்லது. எதிரிகள் பிரச்சினை நீங்கும். பழைய கடன்களை அடைத்து புதிய கடன்களை வாங்குவீர்கள். பல நாட்களாக வாட்டி எடுத்த நோய்கள் உங்களை விட்டு நீங்கப்போகிறது. கடனாக கொடுத்த பணம் திரும்ப கைக்கு வரும். இதுவரை பகையாக இருந்தவர்கள் நட்பாக மாறுவார்கள் மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு தொட்டதெல்லாம் பொன்னாகும் கூடவே பணம் விரையமாகும்.**



## கடகம்

இந்த மாதம் எதிர்ப்புகள் விலகும். எல்லா நன்மைகளும் உண்டாகும். பயணம் மூலம் நன்மை கிடைக்கும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். பணவரத்து அதிகரிக்கும். புத்தி சாதூரியம் கூடும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும் குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும் உறவு பலப்படும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்க பெறுவீர்கள். அவர்களது கல்வியில் முன்னேற்றம் காணப்படும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான நிலை காணப்படும்.சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும்.கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது. மேல்மட்டத்தில் உள்ளவர்களுடன் அதிகரிக்கும். எனவே, முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு முன், நலம் விரும்பிகளின் ஆதரவைப் பெறுங்கள். அதிர்ஷ்டத்தைப் நம்பி எந்தவிதமான பண முதலீடுகளையும் மேற்கொள்ளதீர்கள்.



## சிம்மம்

இந்த மாதம் நீங்கள் பொருளாதார ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் வளர்ச்சி காண இயலும். நீங்கள் தொழிலில் புதிய உத்திகள் மற்றும் தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கும். தங்கள் தொழிலில் முன்னேற்றம் காண இயலும். . உங்கள் சொத்துக்களை விற்று பணம் பெறுவதற்கு இந்த மாதம் அனுகூலமாக இருக்கும். சகோதர சகோதரிகள் பிற இரத்த உறவுகள் மற்றும் பிற கு டு ம் ப உறுப்பினர்களுடன் உறவு பிரச்சினைகளை எதிர்கொள்ள வாய்ப்புகள் உள்ளன. எனவே, உங்கள் உணர்ச்சி வசப்படாமல் செயல்பட வேண்டும். சுமூகமான உறவைப் பேணுவதற்கு மனதில் அமைதியை வளர்த்துக் கொள்ளவும். தியானம் மேற்கொள்ளவும். உங்கள் அன்புக்குரியவர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். உங்களில் ஒரு சிலர் வேலை இழப்பு காரணமாக வருமானத்தை இழக்க நேரலாம். இது நிதிப் நெருக்கடிகளை மேலும்



## கன்னி

எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிப்பீர்கள். எல்லாக் காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். ராசிநாதன் புதனின் சார பலத்தின் மூலம் முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தைக் குறைத்து பேசுவது நல்லது. பணவரத்து இருக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொல்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். நண்பர்கள் மூலமாக நீங்கள் எதிர்பார்க்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும்.



## துலாம்

இந்த சமூகத்தில் உயர்ந்தோரின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்த நண்பர்கள் மனம் மாறி மீண்டும் நட்புடன் பழகத் தொடங்குவார்கள். கடினமான காரியங்களையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். உங்களிடம் கடன் வாங்கியவர்கள் குறித்த நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவார்கள். வசதி படைத்தவர்கள் உங்களின் நண்பர்கள் ஆவார்கள். உங்களின் எளிமையான பேச்சினால் அனைவரையும் கவர்வீர்கள். சமூகத்தில் உங்களின் பெயரும், புகழும் படிப்படியாக உயரும். சிலருக்கு வெளியூர், வெளிநாட்டிற்கு

புதிய சூழ்நிலைகளில் வாழ உங்களைத் தயார்படுத்திக்கொள்வீர்கள். உங்களின் செயல்களைத் திட்டமிட்டு சரியாகச் செய்து முடித்து விடுவீர்கள். தற்போது வசிக்கும் வீட்டை புதுப்பிப்பீர்கள். ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். புதியவற்றைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்திக்கொள்வீர்கள்.



தெய்வ வழிபாடுகளில் மனம் ஈடுபடும். புதிய இடங்களில் உங்களுக்கு சிறப்பான வரவேற்புகள் கிடைக்கும் உங்களை நம்பி வந்தவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வீர்கள். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடுவீர்கள். அனைத்துப் பிரச்சினைகளையும் நுட்பமாக ஆராய்ந்து தீர்க்கமாக முடிவெடுக்கும் காலகட்டம் இது. கலைத்துறையினருக்கு அனுகூலமான திருப்பங்கள் ஏற்படும். பாராட்டும், பணமும் ஒருங்கே கிடைக்கும். சக கலைஞர்களின் மூலம் உங்களைப் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

## விருச்சிகம்



இந்த மாதம் எந்த ஒரு விஷயத்திலும் அவசரம் காட்டினாலும் அதேநேரத்தில் அதில் உள்ள நன்மை தீமைகள் ஆராய்ந்து ஆலோசித்து முடிவு எடுப்பது நன்மை அளிக்கும். வீடு - மனை - வாகனம் சம்பந்தமான காரியங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிட்டும். எதிர்பார்த்தபடி எதுவும் நல்லதாகவே நடக்கும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். கொடுக்கல் வாங்கலில் இருந்த சுணக்க நிலை மாறும். பணவரத்து இருக்கும். கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். நிதானமாக செய்யும் செயல்கள் வெற்றியைத் தரும். ஆடை ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். புதிய வீடு கட்டும் பணியோ அல்லது நிலம் வாங்கும் பணியோ மேற்கொள்வீர்கள். மிக நல்ல பலன்களை

## தனுசு



உங்களுக்கு அற்புதமான கால கட்டம். கஷ்டங்கள் கவலைகள் நீங்கி நல்ல நேரம் பிறந்து விட்டது. குரு பகவானின் பார்வை உங்களுக்கு பொன்னான கால கட்டத்தை கொண்டு வரப்போகிறது. சொத்து சேர்க்கை ஏற்படும். வாழ்க்கையில் மாற்றங்கள் வரப்போகிறது.

புதிய முயற்சிகள் வெற்றிகளை கொண்டு வரப்போகிறது. படித்து விட்டு வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்பு வரப்போகிறது.

உங்களை விட்டு பிரிந்தவர்கள் தேடி வருவார்கள். மன நிம்மதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கப்போகிறது. தொட்டது துலங்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.உங்களுக்கு விபரீத ராஜயோகம் கைகூடி வரப்போகிறது. குடும்பத்தில் கணவன் மனைவி இடையை சின்னச் சின்ன சண்டைகள் வரலாம் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. இந்த மாதம் பொருளாதார வளம் நிறைந்த மாதமாக அமைந்துள்ளது. மாணவர்கள் அதிக மதிப்பெண்களுடன் தேர்வில் வெற்றி பெறுவீர்கள். நினைத்த கல்லூரியில் படிக்க இடம் கிடைக்கும். உங்களுக்கு அற்புதமான கால கட்டம். கஷ்டங்கள் கவலைகள் நீங்கி நல்ல நேரம் பிறந்து விட்டது. குரு பகவானின் பார்வை உங்களுக்கு பொன்னான கால கட்டத்தை கொண்டு வரப்போகிறது. சொத்து சேர்க்கை ஏற்படும். படித்து விட்டு வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்பு வரப்போகிறது. உங்களை விட்டு பிரிந்தவர்கள் தேடி வருவார்கள். மன நிம்மதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கப்போகிறது.

தொட்டது துலங்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.உங்களுக்கு விபரீத ராஜயோகம் கைகூடி வரப்போகிறது. இந்த மாதம் பொருளாதார வளம் நிறைந்த மாதமாக அமைந்துள்ளது. மாணவர்கள் அதிக மதிப்பெண்களுடன் தேர்வில் வெற்றி பெறுவீர்கள். நினைத்த கல்லூரியில் படிக்க

## மகரம்

மகிழ்ச்சிகரமான மாதமாக அமைந்துள்ளது. ஏழரை சனியில் பாத சனி காலம் என்பதால் கவனம் தேவை. பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் உள்ள சுக்கிரன் ஆறாம் வீட்டிற்கு செல்கிறார். புதிய வாய்ப்புகள் தேடி வரும். குழந்தைகளுக்கு உடல் ஆரோக்கியத்தில் சில பிரச்சினைகள் வரலாம். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதிய வேலைக்கு முயற்சி செய்யலாம். நல்ல வேலை கிடைக்கும். தொழில் வியாபாரிகளுக்கு லாபம் வரும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். கணவன் மனைவி இடையேயான பேச்சில் கவனம் தேவை. காதல் மலரும் காலம். கல்யாணம் முடிவாகும். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவைப்படும். யாரை நம்பியும் பணத்தை கொடுத்து ஏமாந்து விட வேண்டாம். பெண்கள் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது அவசியம். சுபகாரியங்கள் கைகூடி வரப்போகிறது.



மாற்றங்களும் முன்னேற்றங்களும் மன மகிழ்ச்சி நிறைந்த மாதமாக மே மாதம் அமைந்துள்ளது. பேசும் போது பொறுமையும் நிதானமும் தேவை.

## கும்பம்

இந்த மாதம் நீங்கள் சிறந்த பொருளாதார வளர்ச்சியைக் காணலாம். பணம் ஈட்டவும் வருமானத்தைப் பெருக்கவும் உங்களுக்கு பல வாய்ப்புகள் கிட்டலாம். இந்த மாதம் உங்கள் பெயரும் புகழும் கூடலாம். நீங்கள் அனைவரிடமும் சுமுக உறவு மேற்கொள்ள எண்ணுவீர்கள். பொறுமையுடன் எதையும் கையாள வேண்டியிருக்கும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், உங்கள் செயல்பாடுகளில் வெற்றியை அடையவும் முடியும். உங்கள் தொழிலில் வளர்ச்சியை அடையவும், முன்னோர்களின் சொத்துக்கள் மூலம் பணம் பெறவும் குல தெய்வ வழிபாடு துணை நிற்கும். தாமதங்கள் மற்றும் சிரமங்களை சமாளிக்கும் தைரியமும் நம்பிக்கையும் உங்களிடம் இருக்கலாம்.



நீண்ட கால ஆசைகளை நிறைவேற்றவும், நிதி வளர்ச்சியின் மூலம் மகிழ்ச்சியைப் பெறவும் வாய்ப்புகள் இருக்கலாம்.

## மீனம்

நினைத்த காரியங்கள் நினைத்தபடி நடந்து மனநிம்மதி அடைவீர்கள். வருமானம் உயரும். செய்தொழிலில் நேர்முக, மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். புதியவர்கள் கூட்டாளிகள் ஆவார்கள். இதனால் கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சிறப்பாக இருக்கும்.



புதிய வாய்ப்புகளும் உங்களைத் தேடி வரும். ஸகுடும்பத்தில் சந்தோஷம் நிறையும். வரும். குடும்பத்தில் சந்தோஷம் நிறையும். முடியாது என்று விட்டுவிட்ட காரியங்களைக் கூட நீங்கள் சுலபமாகச் செய்துமுடிப்பீர்கள். பயணங்களின் போது கவனம் தேவை. . எவருக்கும் இந்தக் காலகட்டத்தில் வாக்கு கொடுப்பதோ முன் ஜாமீன் போடுவதோ வேண்டாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். கடின உழைப்பு காரிய வெற்றியைத் தேடித்தரும். நீண்டநாட்களாக நினைத்திருந்த காரியம் வெற்றி அடையும்.

**மனசே வழி விடு**

**குட்டிச்சுவர் கடந்து**
**மது போத்தல் உடைத்து**
**சேரா காதலை கைவிட்டு**
**கற்பனை கனவை கடாசி**
**வசதிக்கு போட்ட**
**கோடுகளையெல்லாம்**
**அழித்தபடி நகருகையில்**
**வழக்கமாய்**
**கண்கள் விரிய காணும்**
**எது ஒன்றையும்**
**ஏறெடுக்க வில்லை**
**புத்தி வந்தாலும் வந்தது**
**புத்தனுக்கு தாத்தன் போல**
**மனசே வழி விடு என்றது வயசு**

**கவிஜி**

சிறுகதை

# தத்துப்பிள்ளையானாலும்!!

கவி. இ.ஹாரூன்



‘ மாலை சுமார் 6:00 மணி ஆகிவிட்டது. மேற்கில் சூரியன் மெல்ல,மெல்ல மறைந்து கொண்டிருந்தான். இரை தேடச் சென்ற பறவைகள் தங்கள் கூடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தன. மேய்ச்சலுக்குப் போன பசு மாடுகள், எருமைகள் கொட்டடிக்கு திரும்பக் கொண்டிருந்தன. சில்லென்ற தென்றல் காற்று பகல் பொழுது வெயிலின் தாக்கத்தை குறைத்துக் கொண்டிருந்தது. வீட்டின் முன் வாசலில் இருந்த கயின்றுக்கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்த ராமசாமி, இயற்கை தந்த சில்லென்ற காற்றையும், முன் வாசலில் இருந்த மரங்கள் செடி, கொடிகளிலிருந்த மலர்கள் வீசிய நறுமணத்தையும் முகர்ந்து கொண்டு மகிழ்ச்சியான மன நிலையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் .

ஆம், பின்னே மகிழ்ச்சியில்லாமல் இருக்குமா? சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு ஆன்மீக சுற்றுலா சென்ற போது கோவிலின் முன் மண்டபத்தில் அழுது கொண்டிருந்த பெண் குழந்தையை யாரும் ஏன் என்று கேட்காததால் திருமணம் முடிந்த பத்து ஆண்டுகள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லாத தங்களுக்கு இறைவனாக பார்த்துக் கொடுத்த குழந்தை என நினைத்து கோயில் நிர்வாகிகள் மூலம் வழக்கறிஞரை வைத்து ராமசாமி தன் மனைவி சீதாவின் சம்மதத்துடன் குழந்தையை சட்டப்படி தத்து எடுத்து, லட்சுமி என்ற அழகான பெயரை வைத்து வளர்த்து வந்தார்.

ஆனால் செய்தி கேட்ட உறவினர்கள், என்னப்பா ராமசாமி, உனக்கு குழந்தை இல்லையென்பது உண்மைதான். நீ பிரியப்பட்டிருந்தால் நம் சொந்தத்திலேயே ஒரு குழந்தையை தத்து எடுத்திருக்கலாமே, அதை விட்டுவிட்டு, அப்பா யார்? அம்மா யார்? குலம், கோத்திரம் என்ன? என்றெல்லாம் பார்க்காமல், நீ பாட்டுக்கு கோவிலில் கிடைத்தது, நான் தத்து எடுத்து வந்தேன், என்று சொல்கிறாயே, இதை எப்படியப்பா ஏற்றுக் கொள்வது? என கேட்டார்கள். நண்பர்களும் அதை ஆமோதிக்கும் விதமாக ராமசாமியையும் அவர் மனைவி சீதாவையும் விமர்சனம் செய்தார்கள்.

ஆனாலும் சொந்த பந்தங்களின் ஏச்சுகளையும், பேச்சுகளையும் காதில் போட்டுக் கொள்ளாத ராமசாமியும், அவர் மனைவி சீதாவும், தத்தெடுத்த குழந்தையை தங்கள் குழந்தை போல் பாசத்தோடு வளர்த்து, ஆளாக்கி, படிக்க வைத்து, நல்ல மாப்பிள்ளையாய் தேடிப்பிடித்து, சொந் பந்தங்கள் வியக்கும் விதமாக, சீர் சிறப்புகள் நன்றாக செய்து, ஏளனம் செய்த சன் சொந்தங்கள் வியக்கும் விதமாக, விமரிசையாக திருமணம் முடித்து வைத்தார்கள்

மருமகன் விரும்பியபடியே திருமணம் முடிந்த 3 மாதத்திற்குள் தனிக் குடித்தனம் வைக்க ஒப்புக் கொண்ட ராமசாமி தம்பதினியினர், தனிக்குடித்தனத்திற்குத் தேவையான அனைத்து சாமான்களையும், தாங்களே தேர்வு செய்து லாரி மூலம் சம்பந்தியின் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். லாரியில் வந்திறங்கிய சாமான்களை பார்த்த அக்கம் பக்கத்துக்காரர்கள் என்னடா இது, இந்த ராமசாமி இப்போதுதானே பெரிய அளவில் செலவு செய்து கல்யாணம் செய்து வைத்தார், 3 மாதங்களுக்குள்ளாகவே லாரி நிறையை இவ்வளவு வீட்டு சாமான்களை அனுப்பி இருக்கிறாரே, என்ன இருந்தாலும் மகள் மீது பாசம் கொஞ்சமாவா இருக்கும்! அதுதான் தாராளமாக மகள் சந்தோஷப்படுகின்ற அளவில் செலவு செய்கிறார்’ என்று பேசிக் கொண்டனர். சாமான்களைப் பார்த்த மாப்பிள்ளையும், சம்பந்தியும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனந்தக்

கூத்தாடிவிட்டனர். இதை அறிந்த ராமசாமியும், சீதாவும் மிகுந்த சந்தோஷமடைந்தனர். எப்படியோ நம் மகள் சந்தோஷமாக இருந்தால் அதுவே போதும், வேறென்ன வேண்டும் நமக்கு ? என்று பெரு மூச்சு விட்டனர். இரண்டு மாதம் கழித்து லட்சும் தாய்மை அடைந்துள்ளதாக சம்பந்தி தகவல் சொன்னபோது ராமசாமியும் சீதாவும் அடைந்து மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மிகவும் பூரித்துப் போயினர். சொந்தங்களிடம் சொல்லி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். இவை எல்லாவற்றிற்கும் திருஷ்டி ஏற்பட்டதைப் போல் அடுத்த இரண்டு நாளில் ராமசாமிக்கு திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டது. பயந்து போன சீதா உடனடியாக தன் மகளுக்கு செல்போன் மூலம் அழைத்து விவரத்தை சொல்லி உடனே வீட்டிற்கு வரச் சொன்னார். செய்தி கேட்ட மகள் லட்சுமி அம்மா, இன்னைக்குத்தான் உன் மருமகன் என்னை கோயிலுக்கு கூட்டிப் போக சம்மதம் கொடுத்திருக்காரு. நாங்க புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம், இப்போதே நேரமாகி விட்டது. வீட்டிற்கு வந்து அப்பாவை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போய் டாக்டரிடம் காட்டி, வீடு திரும்ப நேரமாகி விடும். ஆகவே நீயே அப்பாவை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போ, நான் அவரை மட்டும் கோயிலுக்கு போகச் சொல்லி விட்டு நான் வந்து விடுகிறேன் என்று சொல்லி பதிலுக்கு காத்திராமல் இணைப்பை துண்டித்து விட்டாள். பதறிப்போன லட்சுமி மிகுந்த சங்கடத்துடன் வீதிக்கு வந்து, ஆட்டோ பிடித்து தன் கணவரை அருகிலுள்ள மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார். ராமசாமியை பரிசோதித்த டாக்டர் பயப்பட ஒன்றும் இல்லை, அதிகமாக மகிழ்ச்சி அடைந்தாலோ அல்லது அதிகமாக கவலைப்பட்டாலோ, இது போன்ற வியாதி மனிதனுக்கு வருவது சகஜம். நான் மருந்து எழுதி தருகிறேன். பதினைந்து நாட்களுக்கு சாப்பிட வையுங்கள். பின்னர் அழைத்து வாருங்கள்.

என்னவாக இருந்தாலும், உங்கள் கணவரை அதிக மகிழ்ச்சி அடையாமலும், அதிகம் கவலைப்படாமலும், பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி ஊசி மட்டும் போட்டு அனுப்பி வைத்தார். வீட்டிற்கு வந்த சீதா கணவரை சாப்பிட வைத்த பின்னர், டாக்டர் கொடுத்த மருந்தை கொடுத்து துங்க வைத்து, தானும் சாப்பிட்டுவிட்டு துதூங்கப் போனாள். அப்போது செல் போன் சிணுங்கியது. தொடர்பு கொடுத்த போது மறு முனையில் பேசிய லட்சுமி அம்மா நான் கர்ப்பமாக இருப்பதால் அவர் என்னை இப்போது ஊருக்கு போக வேண்டாம் என்று சொல்கிறார். இருந்தாலும் நான் வந்து விடுகிறேன். அவர் கோபித்துக் கொண்டாலும் பரவாயில்லை என்று பேசியவள் லட்சுமி பேசுவதற்குள் தொடர்பை துண்டித்தாள். மறுநாள் காலை கண் விழித்த ராமசாமி மனைவியை அழைத்து என் உடம்புக்கு என்ன? ஏன் சோர்வாக இருக்கிறேன் ' என்று கேட்டார். அதற்கு சீதா 'நேற்று மாலை உங்களுக்கு திடீரென்று உடம்பு சரியில்லாமல் போய் விட்டது. நான் தான் உங்களை ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்றேன். உங்களை பரிசோதித்த டாக்டர் என்னிடம் உங்கள் கணவர் உடம்புக்கு ஒன்றும் இல்லை என்றும், அவரை அதிகம் மகிழ்ச்சி அடைய செய்யாமலும், அதிகம் கவலைப்படச் செய்யாமலும், இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்' என்றும் சொல்லி அனுப்பினார் என்று கூறினாள். அதைக் கேட்ட ராமசாமி, ஆமாம் லட்சுமிக்கு சொன்னாயா?'என்று கேட்டார். அதற்கு சீதா ஆமாங்க, உங்களுக்கு திடீரென்று உடம்பு சரியில்லாமல் போனதால் பயந்து போன நான், லட்சுமிக்கு போன் செய்து உடனே வீட்டுக்கு வா, அப்பாவை ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டுப் போகனும்' என்று சொன்னேன். ஆனால் லட்சுமி என்னிடம் அம்மா, இன்னைக்குத்தான் உன் மருமகன் என்னை கோயிலுக்கு கூட்டிப் போக சம்மதம் கொடுத்திருக்காரு. நாங்க புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம், இப்போதே நேரமாகி விட்டது. வீட்டிற்கு வந்து அப்பாவை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போய் டாக்டரிடம் காட்டி, வீடு திரும்ப நேரமாகி விடும். ஆகவே நீயே அப்பாவை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போ நான் பின்னர் வந்து பார்த்துக் கொள்கிறேன் 'என்று சொல்லி பதிலுக்கு காத்திராமல் இணைப்பை துண்டித்து விட்டாள். ஆனால் இப்போது என்னை கூப்பிட்டு

உடனே வருவதாக சொன்னாள் என்றாள். அற்கு ராமசாமி 'அப்படியா சொன்னாள், எப்படியும் என்னை பார்க்க வரத்தானே போறா, வரட்டும்' என்று சொல்லி விட்டு குளிக்க சென்றார். குளித்து முடித்து காலை டிபன் சாப்பிட்டு விட்டு மனைவி கொடுத்த மருந்தையும் சாப்பிட்டு விட்டு கட்டிலில் உட்கார்ந்தார். செய்தித் தாளை படித்து நேரத்தை போக்கினார்.

அற்குள் மதியம் வந்து விடவே சீதா 'ஏனுங்கோ சாப்பாடு ஆறிறுச்சு, சாப்பிட்டுட்டு கொஞ்ச நேரம் தூங்குங்க' என்றாள். அதுவும் சரிதான். சாப்பாடு போடு என்று சொல்லி விட்டு, முகம் கை கழுவிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தார். சீதா சாப்பாடு பரிமாறினாள். சாப்பிட்டுக் கொண்டே என்ன, உம் பொண்ணு இன்னும் வரக்காணோமே? என்று கேட்டார். அதற்கு சீதா, 'நான்தான் சொன்னேனே, அவள் புறப்பட்டு வருவதாக சொன்னாள் என்று என்றாள். சாப்பிட்டு விட்டு மருந்தையும் சாப்பிட்ட ராமசாமி அப்படியா, ரொம்ப நல்லது வரட்டும்' என்றார். ஆனல் லட்சுமி தன் பெற்றோரை காத்திருக்க வைக்காமல் கொளுத்தும் வெய்யிலில் ஆட்டோவில் வந்து இறங்கினாள். அவளை பார்த்த உடன் ராமசாமி 'வாம்மா லட்சுமி, மாப்பிள்ளை வரலையா என்று கேட்டார். அதற்கு லட்சுமி நான் முழுகாமே இருக்கறதாலே, இப்போ பஸ்ஸில் பிரயாணம் வேண்டாம், நீ போகாதே என்று அவர் சொன்னாரப்பா, என்னாலே உங்களே பார்க்காம இருக்க முடியாதுன்னு, நான்தான் அவரிடம் சொல்லாமலேயே வந்துட்டேன்' என்றாள். அதற்கு ராமசாமி ஏம்மா, மாப்பிள்ளை சரியாத்தான் சொல்லியுள்ளார். நீ எப்படியம்மா அவரை விட்டுட்டு தனியே வந்தே 'என்று கடிந்து கொண்டார். 'உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னு அம்மா சொன்னதும் பதறிப்போய் விட்டேனப்பா. அது எப்படி உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னு தெரிந்தும், நான் வந்து பார்க்காமல் யார் வந்து பார்ப்பது? அதான் அவரின் அனுமதியில்லாமலேயே வந்து விட்டேன் என்ற லட்சுமி, அப்பா என்னாச்சு உங்களுக்கு? என்று அழுதபடியே கேட்டாள். சீதா அவளை சமாதானப்படுத்தி ஒன்றுமில்லையம்மா, படபடப்பா இருந்து, வேத்துப்போச்சு, டாக்டர்கிட்ட போனதும் பரிசோதித்த டாக்டர் அதிக சந்தோஷமும், அதிக கவலையும் கூடாது என்றும், பயப்படத் தேவையில்லை என்றும் சொன்னார்' என்று கூறினாள். அப்போது ராமசாமி சீதாவைப் பார்த்து 'பார்த்தாயா சீதா நம் மகளின் பாசத்தை, அப்பாவுக்கு உடம்பு சரியில்லைன்னு தெரிஞ்சதும் அப்பாவை பார்க்க வேண்டும் என்று வீட்டுக்காரரிடம் கூட சொல்லாமல் வந்து விட்டாளே ' என்று மகிழ்ச்சியோடு சொன்னார். அதைக் கேட்ட சீதா லட்சுமி தத்துப்பிள்ளை ஆனாலும் நம்ம பிள்ளைங்க, வளத்துன பாசம் இருக்காதா பின்னே ' என்று கூறினாள். 'நீ என்னைப் பார்க்க வந்தது ரொம்ப சந்தோஷமா இருக்கம்மா' என்று மகளின் கைகளைப் பிடித்து பேசியபடியே மன நிறைவோடு கயிற்றுக் கட்டிலில் தூங்கப்போனார்.



## இன்ஃபினிட் ஸ்ட்ராம்

—— குலசேகர்



நவோமி வாட்ஸ் நடித்து 2022 ல் வெளி வந்த ஒரு சர்வைவல் திரில்லர் படட.ம் இது. ஆனால், வழக்கமான சர்வைலல் திரில்லர் படமாக மட்டும் இதை பார்க்க முடியவில்லை. திரைமொழியின் கூறுகள் பல இடங்களில் ரசிக்க வைக்கின்றன. விளக்கினால் திரைமொழி செத்து விடும். உணர்த்தினால் திரைமொழி உயிர்த்தெழும் என்கிற இலக்கணத்திற்கேற்ப இந்த படத்தை இயக்குநர் மல்கோர்ஸட்டா காட்சிப்படுத்தி இருக்கிறார். இதன் கதைக்களம் வாசிங்டன் ஹில்ஸ் என்கிற பனி சூழ்ந்த மலைப்பகுதியும் அதன் அடிவாரத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கிற இருப்பிடங்களும், உணவு விடுதிகளும் தான். இது ஒரு உண்மை சம்பவத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம். நவோமி ஏற்றிருக்கிற உண்மை கதாபாத்திரத்தின் பெயர் பாம் பேல்ஸ். இவர் சிறந்த நடிகைக்கான ஆஸ்கார் விருதிற்காக பரிந்துரைக்கப்பட்டவர். இவர் ஆஸ்திரேலியாவை சேர்ந்தவர். ஜோக்கரில் எதிர்நாயகனாக நடித்து ஆஸ்கார் விருது வென்று அதை பெறுவதற்கு முன்பாகவே எதிர்பாராத விதமாக மரணித்த ஹீத் லெட்ஜர் தான் இவரின் முதல் காதலர். கிங்காங், தி இம்பாசிபிள், தி இன்டர்நேஷனல், டயானா, ஐ ஆம் ஹீத் லெட்ஜர் போன்றவை நவோமி நடித்த சில முக்கியமான படங்கள். துவக்க காட்சியில் நவோமி காலை ஆறு மணிக்கு எழுந்து, தான் வழக்கமாக முதுகில் மாட்டி எடுத்துச் செல்கிற அந்த பேக்கில் ஞாபகப்படுத்தி எதை எதை எடுத்து வைக்க வேண்டுமோ அதை எல்லாம் மறக்காமல் எடுத்து வைக்கிறாள். அது அவளுக்கு மனப்பாடம். அவள் சில முதலுதவி மருந்துகள், ஆண்டிபயாடிக்குகள், வலி நிவாரணி வில்லைகள், உடனடி ஊக்கசக்தி வழங்குகிற வில்லைகள், வாட்டர் பாட்டில், கம்பளி ஆடை, காலுறை, கையுறை, குல்லா இத்யாதிகள் என்று ஒவ்வொன்றாய் எடுத்து வைக்கிறாள். தானும் ஒன்றின் மீது இன்னொன்றென உடைகள் அணிந்து, கையுறை அணிந்து, ஸ்கார்ஃப் முதலான குளிர் தடுப்பு உடைகள் அணிந்து கொண்டு புறப்படுகிறாள். எதற்காக என்று எந்த இடத்திலும் விளக்கப்படமாட்டாது. அது தான் காட்சிப்பூர்வமான திரைமொழியின் அழகியல். இந்த அழகியல் வழிநெடுக வந்து கொண்டே இருக்கும். போகிற வழியில் தொட்டுச் செல்லலாம். அவருடைய கார் ஒரு உணவு விடுதிக்கு முன்னால் நிற்கிறது. அந்த கதவை திறப்பதற்காக அதன் திருகியை திருகி தள்ள யத்தனிக்கிறார். வழக்கத்திற்கு மாறாக அது திருகி திறப்பதற்கு ஒத்துழைக்காமல் சண்டித்தனம் பண்ணுகிறது. அந்த காட்சி ஒன்றை உணர்த்துகிறது. அது கடுமையான குளிரின் அடையாளத்தை சொல்லாமல் சொல்லிச் செல்கிறது. அந்த விடுதியாளர் வாங்கி இருக்கிற நாய்க்குட்டியை இவர் கையில் எடுத்து கொஞ்சுகிறார். அது அவரின் காருண்ய வெளிப்பாட்டிற்கான காட்சித்துளி. உள்ளே வந்ததும், அவளின் இரண்டு ஃபிளாஸ்குகளிலும் அந்த வயோதிக கடைக்காரர் பிளாக் காஃபி நிரப்புகிறார். நிரப்பிக்கொண்டே உரிமையோடு கிண்டலாக கேட்கிறார். விவாகரத்திற்கு பிறகு எத்தனை காதலர்கள் உங்கள் வாழ்க்கையில் வந்திருப்பார்கள்? என்கிறார். அதற்கு அவள் நிறைய என்று புன்னகையோடு பதிலளிக்கிறாள். அது அப்படி ஒருவரும் இதுநாள் வரை வந்ததில்லை என்பதை உணர்த்துகிறதற்கான குறியீடு. அவர் புறப்பட்டுச் செல்கிற போது பத்திரம் என்கிறார். அதற்கு நாயகி அப்படியே அகட்டும்

என்று கலாய்க்கிற தொனியில் பதிலளித்து செல்கிறார். இதன் மூலம் இங்கே எந்த தகவலும் விளக்கப்படாமல், திரைமொழியானது அவர்களுக்கு இடையே நீண்டகால அறிமுகம் இருப்பதை உணர்த்தி செல்கிறது. அங்கே பனி மலையேற்றம் என்பது ஒரு சாகசமான விசயம். அதற்காக பலரும் அங்கே வருவதுண்டு. குளிர் காலங்களில் அதிகம் வருவதில்லை. அந்த மாதிரி நேரத்தில் பனிப்புயல் எப்போது வேண்டுமானாலும் வீசக்கூடும். அப்போது என்ன நடக்கும் என்று அதற்கே தெரியாது. அதனால் அந்த மாதிரி நேரங்களில் ஆள் வரத்து அங்கே குறைந்தே காணப்படும். அப்படியொரு தருணம் தான் அது என்பதை அங்கே அங்கொன்றும் இங்கொன்றுமாய் மனித வாசம் என்பதே அரிதானதாக தென்படுகிற அந்த காட்சியின் வழியாக உணர்த்தப்படுகிறது. மலை அடிவாரத்தில் இருக்கிற சிறிய மைதானத்தில் காரை பார்க் செய்கிறாள். அங்கேயிருந்து ஒரு காரில் காதல் ஜோடி திரும்பிக் கொண்டிருக்கிறது. டிரிப் எப்படி என்று நாயகி கேட்க, இந்த முறை குளிர் அதிகம் என்று நடுங்கிக்கொண்டே சொல்கிறார்கள். தூரத்தில் தனியாக ஒரு கார் ஏற்கனவே பார்க் செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி, யாருடையது? என்று கேட்க, தெரியவில்லை என்று சொல்லிவிட்டுச் செல்கிறார்கள். அது ஒன்றை திரைமொழி வாயிலாக உணர்த்திச் செல்கிறது.இப்போது வரை அவள் என்ன நோக்கத்திற்காக அந்த கடுங்குளிரில் அந்த மலைச்சிகரம் நோக்கி பயணிக்கிறாள்? என்ன காரணத்தினால் அப்படி உந்தப்பட்டு இருக்கிறாள்? யார் இவள்? என்கிற எந்த கேள்விக்கும் இந்த திரைக்கதை விளக்கம் அளிப்பதில்லை. போகிற போக்கில் அத்தனையையும் உணரத் தருகிறது. அவளின் பயணத்தின் வாயிலாகவே அவளின் இன்றைய இலக்கு நமக்குள் உணர்த்தப்படுகிறது. அவளுக்கு வயது 53. முகத்தில் கவலையின் மௌனரேகைகள் படர்ந்திருந்தாலும், அவள் கண்களில் காருண்யமும், அழகியலை கொண்டாடும் மனநிலையும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. அவள் பனி மழை போர்த்தியிருக்கும் அந்த மலை மீது இரண்டு கைகளிலும் வைத்து இருக்கிற ஊன்றுகோலை பனிப்பொதிக்குள் பதித்து பதிந்து நிதானமாக முன்னேறுகிறாள். நேரம் காலை 9 மணி என்று காட்டுகிறது. போகிற வழியில் அவளின் முன்னெச்சரிக்கையும் தாண்டி எதிர்பாராத சிக்கல்களை எதிர்கொள்கிறாள். போதாததற்கு சற்றும் எதிர்பாராத வகையில் அந்த நேரம் பார்த்து பனிப்புயல் துவங்கி நிற்காமல் தன் ஆவேசத்தை வெளிப்படுத்த துவங்குகிறது. அத்தனையையும் தாண்டி அவள் அவளின் இலக்கை பார்த்து விடுகிறாள். தூரத்தில் ஒரு இளைஞன் அந்த மலைமுகட்டில் முதுகு காட்டியபடி எந்தவித அசைவும் இல்லாமல் உறைந்து போய் அமர்ந்து இருக்கிறான். அவன் முற்றிலும் நம்பிக்கையிழந்து போய் ஏதோ ஒரு புள்ளியிலிருந்து விடுபட இயலாதவனாய் கொஞ்சங்கொஞ்சமாய் உறைந்து கொண்டு இருக்கிறான். ஒரு வகையில் தன்னுடைய நம்பிக்கையை அந்த பனிப்புயலிடம் ஒப்புக்கொடுத்தவனாய் அமர்ந்திருக்கிறான். அருகே சென்று அவனின் நனைந்திருந்த காலுறை கழற்றி, தேய்த்து விடுகிறாள். பேக்கிலிருந்து புதிய காலுறை எடுத்து அணிவித்து, உடை கழற்றி மாற்று உடை அணிவித்து, பனிக் குல்லா அணிவிக்கிறாள். அவன் கண்களை இறுக்கமாக ஒரு தபசி போல மூடிக்கொண்டு இருக்கிறான். அப்போது நேரம் பகல் பனிரெண்டு என்று காட்டுகிறது. அவள் அவன் கண்களை திறந்து பார்க்க சொல்கிறாள். அவன் கன்னத்தில் மாறிமாறி தட்டுகிறாள். அவன் அசூயையோடு மெல்ல கண்களை திறக்கிறான். அவனை பின்னால் கூடி தூக்கிவிட்டு எழுந்து நடக்க தன்னுடைய எடை குறைவான அந்த ஊன்றுகோலை தருகிறாள். அவனின் குரலில் நம்பிக்கை வறட்சி முழுமையாக நிறைத்திருக்கிறது. அவள் அதை சட்டை செய்யாமல் அவனை அந்த பனிப்புயலின் தீவிரத்தையும் மீறி, எப்படியாவது அந்த பனி மூடிய அந்த சிறிய சிகரத்தின் முகட்டிலிருந்து கீழே அழைத்துப்போய், வழியில் குறுக்கிடும் நதி கடந்து, சவுக்கு தோப்பு கடந்து, மையச்சாலை தொட்டு, வாகனம் நிறுத்தப்பட்டிருக்கிற இடத்தை அடைந்தாக வேண்டும். அவள் தன் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறாள். யார் நீ? என்கிறான். உன்னை மீட்க வந்தவள் என்கிறாள். மீட்பு குழுவை சேர்ந்தவள் என்றால் ஒரு ஹெலிகாப்டர் கூடவா இல்லை. இப்படி இந்த பனிச்சகதிக்குள் இரும்பு குச்சி ஊன்றி நடந்தே வந்திருக்கிறாய் என்கிறான். உயிர் கொஞ்சங்கொஞ்சமாய் விடைபெற்றுக் கொண்டிருக்கிற அந்த தருவாயிலும், அவனிடமிருந்து அப்படியொரு டார்க் ஹியூமர் வெளிப்பட, கலங்கிய கண்களோடே இருவரும்

மெலிதாய் புன்னகைத்து கொள்கிறார்கள். இந்த படைப்பு வழக்கமான உச்சுக்கொட்டல்களை ஒரு இடத்திலும் உண்டாக்குவதில்லை. மிகுந்த ஈடுபாட்டோடு நம்மையும் அந்த பனிப்புயலுக்குள் அழைத்துச் சென்று விடுகிறது. அங்கிருந்து நம் உணர்வுகளும் எதிர்பாராத பல பரிமாணங்களுக்குள் பயணிக்க ஆரம்பித்து விடுகிறது. போகிற வழியில் அவர்கள் பல இன்னல்களை சந்திக்கிறார்கள். ஒரு இடத்தில் அவன் வழுக்கிக் கொண்டு விழ, அவளும் சறுக்கிக்கொண்டே பின்தொடர்கிறாள். அவன் வாழ்வின் இறுதி கணங்கள் நெருங்கி விட்டதாக உணர்கிறான். அவள் அவனை அவனின் அவநம்பிக்கைக்குள் மூழ்க அனுமதிப்பதாய் இல்லை. அவனை அன்பின் திருக்கரங்களால் ஏந்திக் கொள்கிறாள். கெண்டைகாலில் ஏற்பட்டிருந்த சிராய்ப்பிற்கு பிளாஸ்திரி ஒட்டி விடுகிறாள். சுடச்சுட பிளாக் காஃபி தருகிறாள். கொண்டு வந்திருந்த மாத்திரைகள், வலி நிவாரணி வில்லைகள், எதிர்ப்பு சக்தி மற்றும் உற்சாகம் தருவதற்கான வில்லைகள் என அடுத்தடுத்து தந்து போட்டுக்கொள்ள சொல்கிறாள். பயப்பட வேண்டாம் ஜான். நான் ஒரு நர்ஸ் தான் என்கிறாள். அவன் அவனை கண்ணின் இமை போல காத்தருகிறாள். அவனுக்கு படிப்படியாக அவன் மீது நம்பிக்கை வந்து சேருகிறது. உண்மையில் அவன் தற்கொலை பண்ணிக் கொள்வதாக அங்கே வந்திருந்தவன். இப்போது வாழ்ந்து தான் பார்த்து விடலாம் என்கிற மனநிலையோடு அவள் கைப்பிடியின் ஒத்தாசையில் சாலையை நெருங்கிக் கொண்டு இருக்கிறார்கள். உயிர்மட்டுமே எஞ்சியிருக்கிற நிலையிலும் ஏராளமாக கொட்டிக்கிடக்கும் தன்னம்பிக்கையோடு அவள் அவனை அழைத்து வருகிறாள். அவள் ஏதாவது ஒரு புள்ளியில் எங்கே செயலிழந்து விடுவாளோ என்று நினைக்க வைக்கிறது. அவளின் வைராக்கியம் அப்படியெல்லாம் நடக்க விடுவதில்லை. சாலை வந்து விடுகிறது. மூச்சு வாங்க அவளின் வாகனம் நோக்கி செல்கிறாள். இந்த நேரத்தில் என்ன தோன்றியதோ அவனுக்கு. தட்டுத்தடுமாறி அவன் தன் வாகனத்தை நோக்கி வேகமாக சென்று, அதில் ஏறியமர்ந்த நொடியில் மின்னலாய் பறந்து போகிறான். அத்தனைக்கும் காரணம் உண்டு. எந்த காரணமும் இங்கே சொல்லப்படுவதில்லை. உணர்த்தப்பட்டு விடுகிறது. அவளுக்கு அழுகையாக வருகிறது. அது அவன் நன்றியுணர்ச்சியோடு நடந்து கொள்ளவில்லையே என்பதல்ல. வேறு?? அவள் சற்றே ஏமாற்றத்தோடு தன் இருப்பிடம் நோக்கி செல்கிறாள். ஃப்ரிஜ் திறந்து பீர் எடுத்து மடக்மடக்கென குடிக்கிறாள். பீட்சாவில் ஒரு துண்டை எடுத்து சாப்பிடுகிறாள். அப்படியே தூங்கிப் போகிறாள். இப்போது ஒரு காட்சி காட்டப்படுகிறது. அந்த காட்சி முழுக்க எந்த ஒலியும் கேட்பதில்லை. நிசப்தத்தில் அரங்கேறுவதன் மூலம் முன்பு எப்போதோ நடந்த அந்த காட்சி, இப்போது அவள் கனவின் வழி வெளிப்படுவதை இதன் திரைமொழி உணர்த்துகிறது. அந்த காட்சியில் முன்பு எப்போதோ வீட்டில் கேஸ் லீக்காகி, தன் இரண்டு சிறிய பெண் குழந்தைகளும் மூச்சு முட்டி சரிய, அவர்களை காப்பாற்ற எவ்வளவோ முயன்றும் முடியாமல் அரை மயக்கநிலையில் அவளும் சரிகிறாள். இப்போது அவள் எதற்காக நர்ஸாக இருந்து கொண்டு, இப்படியாக அவசர காலத்தில் அந்த மலைமுகட்டில் மாட்டிக் கொள்கிறவர்களை தான் ஒருத்தியாக போய் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறாள் என்கிறதற்கான விடை நமக்கு கிடைத்து விடுகிறது. அடுத்த நாள் அவளுக்கு ஒரு கனவு. சர்ரியலிச காட்சியாக வருகிற அதில், அவளின் குழந்தைகள் கண்ணாடி தடுப்பில் படிந்திருக்கும் பனியின் மீது மூன்று ஆட்டின் வரைகிறார்கள். இப்போது அவர்களை காணவில்லை. அந்த கண்ணாடி சன்னல் வழியாக பார்க்கையில் அவள் ஏக்கத்தோடு காத்திருக்க, அதில் இரண்டு ஆட்டின் தென்படுகிறது. காலையின் ஒலி கேட்க ஆரம்பிக்கிறது. அவள் எழுந்து குளித்து காஃபி போட தயாராகிறாள். அப்போது ரேடியோவில் ஒரு செய்தி. ஆபத்தான சூழ்நிலையில் இருந்த ஒருவனை தன் உயிரையும் பொருட்படுத்தாமல் போராடி பாம் பேல்ஸ் காப்பாற்றிய விவரத்தை வாக்குமூலமாக தந்து விட்டு, அவன் தன்னைப்பற்றி எதுவும் தெரிவிக்காமலே சென்று விட்ட விவரம் அவளுக்கு தெரிய வருகிறது. அன்று ஒரு பத்திரிகையாளன் அவளை வந்து சந்திக்கிறான். ஏராளனமானவர்கள் உங்களுக்கு பாராட்டு தெரிவிக்க காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் ஒரு உத்வேகம். உதாரணமாக இருக்கிறீர்கள் என்று சொல்லி நடந்ததை கேட்டறிந்து

அன்று ஒரு பத்திரிகையாளன் அவளை வந்து சந்திக்கிறான். ஏராளனமானவர்கள் உங்களுக்கு பாராட்டு தெரிவிக்க காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் ஒரு உத்வேகம். உதாரணமாக இருக்கிறீர்கள் என்று சொல்லி நடந்ததை கேட்டறிந்து செல்கிறான். அவளுக்குமே ஜான் என்பது அப்போதைக்கு அவன் சொன்ன கற்பனை பெயர் என்பது அப்போது தான் புரிகிறது. அவள் மறுபடி அந்த மலை மீது எங்கே அவன் நடைப்பிணமாக உட்கார்ந்தபடி உறைந்திருந்தானோ, அங்கே போய் அதே மாதிரி உட்காருகிறாள். இப்போது பனிப்புயல் இல்லை. சூழல் ஓசையற்று மௌனித்துப் போய் இருக்கிறது. சில நாட்களில், அந்த மலையடிவாரத்தில் இருக்கிற உணவு விடுதிக்கு வரும்படி அவளுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. அவள் தன் காரை எடுத்துக்கொண்டு புறப்படுகிறாள். அதே இடத்தில் நிறுத்துகிறாள். அவள் காரின் நம்பர் பிளேட் மேலே லிவ் ஃபிரி ஆர் டை என்கிற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அங்கே அவன் அவளுக்காக காத்து இருக்கிறான். அவள் அவனை எப்படி அழைக்கட்டும். உன் பெயர் கூட எனக்கு தெரியாது என்கிறாள். ஜான் என்றே அழையுங்கள். அது எனக்கு பிடித்து இருக்கிறது என்கிறான். அவன் அவள் அவனுக்கு தந்திருந்த உடைகளை தோய்த்து, இஸ்திரி பண்ணி ஒரு பையில் வைத்து இருந்ததை அவளிடம் தந்து விட்டு, தனக்கு நடந்ததை சொல்கிறான். இவளுடைய பெண் குழந்தைகள் அகாலத்தில் மரித்துப் போனது மாதிரி, அவனின் காதலி மரித்துப்போனதை தாளமுடியாத வலியோடு சொல்கிறான். அங்கே தற்கொலை செய்து கொள்ள போனதாகவும், அதன் மூலம் அவளோடு சேர்ந்து விடலாம் என்றும், அவள் வந்து தன்னை அழைத்துக் கொள்வாள் என்று கண்களை மூடிக்கொண்டு அமர்ந்து இருந்ததாகவும், அப்போது அவள் வரவில்லை. ஒரு அழகான தேவதை போல நீங்கள் தான் வந்தீர்கள் என்று சொல்கிறபோது, அவனையும் அறியாமல் கண்களில் நீர் பெருகி, உதட்டை நனைக்கிறது. அவள் தனக்கு நேர்ந்ததை சொல்கிறாள். அவனின் கரத்தை பற்றி தன் கரத்திற்குள் வைத்துக்கொண்டு ஆதரவாய் சொல்கிறாள். உலகத்தில அழகு எல்லாவற்றிலும் இருக்கிறது. இடைவிடாமல் பொழிகிற பனிப்புயலிலும் ஒரு அழகு ஒளிந்து கொண்டு தான் இருக்கிறது என்கிறாள். அவள் யாரை குறிப்பிடுகிறாள் என்பது அவர்களுக்கு புரிந்து இருக்கிறது.

## எந்தெந்த மாதத்தில் என்னென்ன காய்கறிகள் பயிரிட வேண்டும்.

**ஜனவரி: (மார்கழி – தை)**

*1) கத்தரி, 2)மிளகாய், 3)பாகல், 4) தக்காளி, 5) பூசணி, 6)சுரை, 7)முள்ளங்கி,8) கீரைகள்.*

*பிப்ரவரி: (தை - மாசி)*
*1) கத்தரி, 2)தக்காளி, 3) மிளகாய், 4)பாகல், 5) வெண்டை, 6)சுரை, 7) கொத்தவரை, 8)பீர்க்கன், 9) கீரைகள், 10)கோவைக்காய்.*

*மார்ச்: (மாசி - பங்குனி)*
*1)வெண்டை, 2)பாகல், 3)தக்காளி, 4)கோவை, 5)கொத்தவரை, 6)பீர்க்கன்.*

*ஏப்ரல் : (பங்குனி - சித்திரை)*
*1)கொத்தவரை, 2) வெண்டை.*

*மே: (சித்திரை - வைகாசி)*
*1) கத்தரி, 2)தக்காளி, 3)கொத்தவரை.*

*ஜூன் : (வைகாசி - ஆனி)*
*1) கத்தரி, 2)தக்காளி, 3)கோவை, 4)பூசணி,5) கீரைகள், 6)வெண்டை.7) செடி முருங்கை*

*ஜூலை: (ஆனி -ஆடி)*
*1) மிளகாய், 2)பாகல், 3)சுரை, 4)பூசணி,5) பீர்க்கன், 6)முள்ளங்கி, 7)வெண்டை, 8)கொத்தவரை, 9)தக்காளி.*

*ஆகஸ்ட்: (ஆடி - ஆவணி)*
*1) முள்ளங்கி, 2)பீர்க்கன், 3)பாகல், 4) மிளகாய், 5)வெண்டை, 6)சுரை..*

*செப்டம்பர்: (ஆவணி - புரட்டாசி)*
*1) கத்தரி, 2)முள்ளங்கி, 3)கீரை, 4)பீர்க்கன், 5)பூசணி.*

*அக்டோபர்: (புரட்டாசி - ஐப்பசி)*
*1)கத்தரி, 2)முள்ளங்கி.*

*நவம்பர் : (ஐப்பசி - கார்த்திகை)*
*1)செடிமுருங்கை, 2)கத்தரி, 3)தக்காளி, 4)முள்ளங்கி, 5)பூசணி.*

*டிசம்பர் : (கார்த்திகை - மார்கழி)*
*1)கத்தரி, 2)தக்காளி.*

**தொகுப்பு:– பாரஞ்சித்குமார்.**



பார்க்க ரசிக்க
அச்சாரம் tv @ SKRN MEDIA (you tube channel)
SGB
SKR
MEDIA
SUBSCRIBE LIKE SHARE

# கவிதைக் கூடல்

நல விசாரிப்பு!

பல ஆண்டுகளுக்குப் பிறகான
பழைய மாணவர்களின்
ஒன்றுகூடல் சந்திப்பில்
ஒருவருக்கொருவர்
மீள் நினைவுகளோடு
பார்த்துக்கொண்டவர்களை
பார்த்த மகிழ்வில்
தென்றலை அனுப்பி
நலம் விசாரிக்கின்றன
பள்ளி மைதானத்தில்
அவர்கள் நட்டு வளர்த்த மரங்கள்.

-பொ.தமிழ்த்தென்றல், திட்டக்குடி

விசுவாசம்!

செல்லக் கோபத்தில்
'இதுதான் நீயாம்' என
சிறுமகள் வரையும்
எனையொத்த நாய்க்குட்டி
அவளுக்கு மட்டுமே
விசுவாசமாய் வாலாட்டுகிறது.

-எம்.எல்.சோழன், தருமபுரி

தற்காலிக தப்பித்தல்!

கசாப்புக்கடையின் வியாபார மந்தம்
அடுத்துவரும் நாட்களுக்கு
தள்ளிப்போடுகிறது
கழுத்தறுபடக் காத்திருக்கும்
மிச்ச ஆடுகளின் மரணத்தை.

-கோ.இனியவன், விழுப்புரம்

வெறுமை!

வெயிலில் காய்ந்து
பெருமழையில் நனைந்து
பாதுகாப்புக் கவசமெனும்
தகரத் தகடுகளை மீறிப் படியும்
வீதிப்புழுதி ஏற்று
கடப்போர் கவனத்தைத் திருப்பிடாமல்
தேரடியில் நின்றிருக்கும்
அலங்காரம் இல்லாத தேர்
விருந்தினர் வருகைக்குப் பிறகான
வீட்டின் வெறுமையை
நினைவுபடுத்துகிறது.

-ஆர்.சுவாமிநாதன், கும்பகோணம்

இறக்கைகள்!

நான் எறிந்திடும்
தட்டாங்கற்களுக்கு
நீர்த்திவலை
இறக்கைகளைப் பொருத்தி
அழகு பார்க்கிறது குளம்.

-க.விநாயகம், செஞ்சி

கனத்தல்!

தலையில் வெயில் சுட
தாயின் இடுப்பில் அமர்ந்தவாறு
எதிர்ப்புறம் கடக்கும்
குழந்தையைக் கண்டநொடி
மலையெனக் கனக்கிறது
நிழலுக்கென நான்
கைப்பிடித்திருக்கும் குடை.

-எஸ்.பாபு, வேலூர்

(தொகுப்பு: பாப்பனப்பட்டு வ.முருகன்)

Owned, Published and Printed by M.C.SEKAR Published from SF1, 2nd Floor, 5/10, Anna Colony, Virugambakkam, Chennai - 600 092. Printed at J.M.PROCESS at 22/49, Subedar hussain Street, Border thottam, Royapettah, Chennai - 600 014. Editor: M.C.SEKAR


விரைவில்
உங்கள் அபிமான திரையரங்குகளில்
SASIKALA PRODUCTION
SHALOM STUDIOS
JOHN MAX & P.ANTONY DOSS
PROUDLY PRESENTS
ANDREA JEREMIAH
கா
THE FOREST
WRITTEN & DIRECTED BY NANJIL
MUSIC SUNDER C BABU CINEMATOGRAPHY ARIVAZHAGAN ART A.PAZHANIVEL
EDITING ELISA STUNT EDI MINNAL ELANGOVAN COSTUMER L.DHANAPAL
CHOREOGRAPHY LOGU SOUND MIXING R.KRISHNAMOORTHY D.F.TECH
SFX SETHU VFX BAYWOOD PRODUCTION MANAGER SHANKAR.G
EXECUTIVE PRODUCER JOSE CO - PRODUCER THAYABARAN
PRO MOUNAM RAVI STILLS CHANDRU
DESIGNS DINESH ASHOK
PRE - PRODUCTION SASIKALA PRODUCTION
PRODUCED BY JOHN MAX

ACCHARAM, Tamil monthly,May 2024
RNI No.TNTAM/2016/69258 R.Dis.No.610/2016
Date of publication 1st Every Month
Postal Reg.No.TN/CC(S)DN/559/23-25
Poster at Pathrika channel Egmore
Posted between 1-7 May 2024

